16TH NOVEMBER 2025

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 02 | இதழ்: 93 | பக்கங்கள் - 19 | editor.uthayam@gmail.com

## அரச நிறுவனங்கள், பாடசாலைகளில் போதைப் பொருள் தடுப்புக் குழுக்கள்!

**பாதுகாப்பு அமைச்சு உத்தரவு!**

அனைத்து அரசாங்க நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களிலும் போதைப்பொருள் தடுப்புக் குழுக்களை அமைக்குமாறு

05ம் பக்கம்பார்க்க...

# மர்மம் துலங்காத சஹ்தியின் மரணம் மரணத்தில் முழுமையான சந்தேகம்

## மூடி மறைக்க திரைமறைவில் முயற்சி?

## நீதி கோரி மனமுருகும் தந்தை!

(எம்.கே.எம.நியார், பதுளை)

சில்மியாபுர ஜமாலிய்யா மத்ரஸாவில் மார்க்கக் கல்வி கற்ற ஹாலி எலையைச் சேர்ந்த 12 வயதான எம்.ஏ.எம்.ஷஹ்தியின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக அவர்களுடைய பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

ஷஹ்தி தஹஜ்ஜத் தொழுகைக்காக எழுந்து சிறுநீர் கழிக்க

04ம் பக்கம்பார்க்க...




AL JAMALIYYA ARABIC COLLEGE

## அல் குர்ஆன் விவகாரம் தொடர்பாக செவ்வாயன்று ஜனாதிபதியுடன் பேச்சு!

**பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான்**



சுங்கப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 15000 குர்ஆன் பிரதிகளை இந்தியாவுக்கு அனுப்பாது நாட்டுக்குள் பயன்படுத்துவது தொடர்பாக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் ஜனாதிபதி அனுர

02ம் பக்கம்பார்க்க...

## மீள் விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்; சஹ்தியின் மரணம் குறித்து மத்ரஸா அறிக்கை

கடந்த திங்கட்கிழமை (November 3, 2025) அன்று எமது கல்லூரியில் துரதிஷ்டவசமாக காலஞ்சென்ற ஹிப்ரி பிரிவைச் சேர்ந்த M.A.M.Sahdhi என்ற மாணவரின் இறுதிக் கிரியைகள், முறைமைப் புன்னரீவுரைகள் மற்றும் சட்ட வைத்திய அதிகாரிகளின் அறிக்கைக்கு அமைவாகவே சட்டபூர்வமாக

03ம் பக்கம்பார்க்க...

## அரச மருத்துவ அதிகாரிகள் வேலை நிறுத்தத்துக்கு முஸ்தீபு

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாளை (17) தொழிற்சங்க நடவடிக்கையை தொடங்க முடிவு செய்துள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில் சுகாதார சேவை மற்றும் மருத்துவர்களின் பிரச்சினைகளை ஜனாதிபதி முறையாக தீர்க்கவில்லையென கூறி அதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த தொழிற்சங்க நடவடிக்கையை

02ம் பக்கம்பார்க்க...

## காஸா சர்வதேச அமைதிப்படை ஒப்பந்தத்தை உறுதிப் படுத்த வேண்டும்

**துருக்கிய அரசாங்கம் வலியுறுத்து**




பல்வேறு நாடுகளின் ராணுவத்தினரை உள்ளடக்கிய சர்வதேச கூட்டுப்படை காஸா சமாதான உடன்படிக்கையை உறுதிப்படுத்த வேண்டும் என்று

02ம் பக்கம்பார்க்க...

## காஸா அமைதி ஒப்பந்தம் குறித்து பாதுகாப்பு சபையில் 17 ல் வாக்கெடுப்பு

காஸாவில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அமைதி

02ம் பக்கம்பார்க்க...

## வறுமை குறித்து அரசிடம் சரியான நிலைப்பாடில்லை



**சஜித் பிரேமதாச**

மக்கள் மாற்றுத் தரப்பை நாடியிருந்தாலும், அந்த மாற்றுத் தரப்பு சரியாக அமைந்து காணப்படாமையினால் அவர்களின்

03ம் பக்கம்பார்க்க...

## அமெரிக்க சிறப்பு தூதுவர் ஸ்டீவ் ஹமாஸ் தலைவருடன் விரைவில் சந்திப்பு



காஸா உடன்படிக்கையின் அடுத்த கட்ட பேச்சுவார்த்தை குறித்து பேசுவதற்காக ஹமாஸ் தலைவர் கலீல் அல் ஹய்யாவுடன் அமெரிக்க சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காஃப் விரைவில் சந்திக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக

02ம் பக்கம்பார்க்க...

## மாகாண சபைத் தேர்தல் குறித்து ஆராய தெரிவுக்குழு

மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது தொடர்பான சட்ட நிலைமையை மீளாய்வு செய்வதற்கும், தேர்தலை விரைவாக

02ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் மலிவான மாதாந்த தவணைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 1,933/-
ரூ.100,000க்கு வாடகை*

- குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரை மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

குமார திஸாநாயக்கவைச் சந்தித்து கலந்துரையாட விருப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சின் விவாதம் நடைபெறுகின்ற தினத்தில் ஜனாதிபதி வருகை தரவிருப்பதால் அவரை அங்கே சந்தித்து அல் குர்ஆன் பிரதிகளை நாட்டுக்குள் பயன்படுத்துவது தொடர்பான அனுமதியைக் கோரவிருப்பதாக காதர் மஸ்தான் எம்.பி மேலும் தெரிவித்தார்.

கடந்த வியாழன்று தெஹிவளையில் நடைபெற்ற முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முஸ்லிம் இயக்கங்களின் பிரதிநிதிகள் சிவில் சமூகப் பிரதிநிதிகள் உட்பட்ட பெருந்தொகையானோர் கலந்து கொண்ட கூட்டத்தில் இக் குர்ஆன் பிரதிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பாது நாட்டுக்குள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்குமாறு ஜனாதிபதியைச் சந்தித்து கோரிக்கை விடுக்க தீர்மானிக்கப்பட்டது.

கட்சி பேதமின்றி பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்ற ஏனையோரும் இத் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இது தொடர்பாக ஜனாதிபதியைச் சந்தித்து சாதகமான தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு எல்லோரும் கூட்டாக முயற்சிப்பதற்கும் முடிவாகியது.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக சுங்கத் திணைக்களத்தில் 25.000 குர்ஆன் பிரதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக நடாத்தப்பட்ட பல்வேறு மட்டப் பேச்சுக்களில் இணக்கப்பாடு எட்டப்படாததையடுத்து இவற்றை அனுப்பி வைத்த மக்காவில் வசித்து வரும் சாதிக் ஹாஜியார் இந்தியா அல்லது கனடாவுக்கு இதனை அனுப்பி வைக்க தீர்மானித்ததாகத் தெரிவித்தார். இது தொடர்பாக சாதிக் ஹாஜியாரிடம் உதயம் தொடர்பு கொண்ட போது தெளிவான முடிவொன்று மேற்கொள்ளப்படாததால் இவ்வாறு தீர்மானித்ததாகத் தெரிவித்தார்.

## அமெரிக்கா...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பிணைக் கைதிகள் விடுவிப்பு, இறந்தவர்களின் உடல்களை ஒப்படைத்தல் என காஸா உடன்படிக்கையின் முதல் கட்ட ஒப்பந்தங்களை ஹமாஸ் இயக்கம் பெரும்பாலும் நிறைவேற்றி உள்ளது. ஆனால் இஸ்ரேல் தனது தரப்பு வாக்குறுதிகளை முறையாக நிறைவேற்றவில்லை.

நிவாரண பொருட்களை அனுமதித்தல், சிறைவாசிகளை விடுதலை செய்வது, படையினரை வாபஸ் வாங்குதல் என எதையும் இதுவரை இஸ்ரேல் முழுமையாக நிறைவேற்றவில்லை. இந்நிலையில் ஹமாஸ் இயக்க தலைவர் கலீல் அல் ஹய்யாவுடன் அமெரிக்காவின் சிறப்பு தூதுவர் ஸடீவ் விட்காஃப் விரைவில் சந்தித்து பேச உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

தற்போது இஸ்ரேல் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மட்டும் முதலீடுகளை செய்வது, காஸாவில் வெளிநாட்டு படையினரை நிறுத்துவது என அமெரிக்கா புதிய திட்டங்களை வைத்துள்ளது. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் அது ஃ பலஸ்தீனர்களுக்கு பாதகமாகவே அமையும். அமெரிக்காவில் இத்திட்டத்திற்கு அரபு மற்றும் ஐரோப்பிய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன இதற்கு மாற்றாக ஒரு புதிய திட்டத்தை ஐக்கிய நாடுகள் சபையில் ரஷ்யா ஒப்படைத்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சூழலில் ஹமாஸ் தலைவர் உடனான அமெரிக்க தூதுவரின் சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது. பொதுவாக ஹமாஸ் தலைவர்களுடன் அமெரிக்கா நேரடி பேச்சு வார்த்தை மேற்கொள்ளாத நிலையில் தற்போது அதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

## காஸா அனுமதி...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

ஒப்பந்தத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் தீர்மானம் மீதான வாக்கெடுப்பு நாளை (17) ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இடம்பெறவுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முன்மொழிந்த காஸா அமைதி ஒப்பந்தத்திற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் இந்த வாக்கெடுப்பு இடம்பெறவுள்ளது.

காஸா அமைதி ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் அண்மையில் வொஷிங்டனில் நடைபெற்றன.

இந்தத் தீர்மானம், அமெரிக்காவின் அமைதித் திட்டத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்லும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

காஸா அமைதி ஒப்பந்தத்தில், காஸாவுக்குத் தற்காலிகமாக தலைமை தாங்கும் நிர்வாகக் குழுவொன்றை அமைப்பது தொடர்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## காஸா சர்வதேச...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

துருக்கி தெரிவித்துள்ளது.

சமாதான உடன்படிக்கையின் ஓர் அங்கமாக பல நாடுகளின் ராணுவத்தினரை உள்ளடக்கிய ஒரு சர்வதேச கூட்டுப்படை காஸாவில் நிறுத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறியிருந்தார். ட்ரம்பின் இந்த திட்டத்திற்கு எதிர்ப்புகளும் எழுந்துள்ளன. ஒரு புதிய மாற்றுத் திட்டத்தை ஐக்கிய நாடுகள் சபையில் ரஷ்யா முன்வைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இவ்வாறு ஒரு சர்வதேச படை நிறுத்தப்படும் பட்சத்தில் அது உடன்படிக்கையை உறுதிப்படுத்த வேண்டும் என்று துருக்கி தெரிவித்துள்ளது. உடன்படிக்கையை இஸ்ரேல் தொடர்ந்து மீறி வரும் நிலையில் துருக்கியின் இந்த கருத்து வெளிவந்துள்ளது.

இந்தப் படையில் தங்கள் ராணுவத்தினரை இணைப்பதற்கு இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. துருக்கியும் தனது படையினரை காஸாவில் நிறுத்துவதற்கு விரும்புகிறது. ஆனால் துருக்கிய படைகள் காஸாவிற்குள் வரக்கூடாது என்று இஸ்ரேல் கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகிறது.

## அரசு...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தொடங்க முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்க தரப்பினருக்கு அறிவித்துள்ளதாகவும், அதற்கு சாதகமான பதில் கிடைக்காததால், இந்த தொழிற்சங்க நடவடிக்கையை தொடங்க தங்கள் சங்கம் நடவடிக்கை எடுத்ததாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.

# ஹஜ் பயண முகவர் சங்கத்தின் தலைவராக அம்ஜடீன் தெரிவு





2025 ஆம் ஆண்டுக்கான இலங்கை ஹஜ் முகவர் சங்கத்தின் தலைவராக அம்ஜா ட்ரவல்ஸ் உரிமையாளர் எச்.எம். அம்ஜடீன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

செப் 24 ஆம் திகதி டுபாயிலுள்ள MERCUR DUBAI DEIRA ஹோட்டலின் போல் ரூமில் நடைபெற்ற சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திலேயே இந்தத் தெரிவு நடைபெற்றுள்ளது.

இந்த வருடத்துக்கான ஹஜ் பயண முகவர் சங்கத்தின் நிர்வாகக் குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டோர்:

தலைவர்: எச்.எம். அம்ஜடீன் (AMJA Travels)

உப தலைவர்கள்: MRM பாரூக் (Safeway Travels ), அல்ஹாஜ் SA அமானுல்லா (MPS Haj Travels)

செயலாளர்: சப்ராஸ் ஸலூன் (Khairaz International Tours and Travels )

உப செயலாளர்: அஸ்கர் அவுன் (Global Travels and Leisure (pvt) Ltd

பொருளாளர்: குஅப் ஜமால்தீன் (Travel Data Tours and Travels )

உப பொருளாளர்: ஷியாம் சிராஜுதீன் (Khakiya Travels and Tours )

நிர்வாக சபை உறுப்பினர்கள்:

HM ஸமீம் (Safa Travels and Tours)

SMM நுஹ்மான் (Siddeeq Travels and Tours)

MRM நைஸர்(Al Aqsa Global (pvt) Ltd.

மௌலவி ஜமால்தீன் அப்துல் லத்தீப் (Hafsa Travels and Tours)

கடந்த நிர்வாகக் குழுவின் செயலாளரும் பொருளாளரும் நடப்பு வருடத்திலும் குறித்த பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த நிர்வாகக் குழுவின் தலைவராக ACBM கரீம் (Careem Lanka) கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாகாண...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்படும் என்று சபைத் முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.




## வறுமை...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

எதிர்பார்ப்புகள் இன்று தோல்வி கண்டுள்ளன. கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்திற்கு கோடிக்கணக்கான ரூபா ஒதுக்கப்பட்டுள்ள தருணத்தில் நாட்டில் வறுமை அதிகரித்து காணப்படுகின்றன. அரசாங்கத்திடம் தற்போது வறுமை குறித்த சரியான நிலைப்பாடொன்று இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில் இன்று (16) கலந்து கொண்டு உரையாற்றும்போதே சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் என்பது தமது நண்பர்களுக்கு திறைசேரியை காலி செய்ய வழங்கப்பட்ட சந்தர்ப்பமாகும். தற்போது, நாட்டில் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து, மக்கள் மத்தியில் இரத்தச் சோகை ஏற்படும் நிலையும் அதிகரித்து காணப்படுகின்றன. இதற்கு வறுமையே காரணமாகும். இவற்றுக்கெல்லாம் அரசியலமைப்பு எதேச்சதிகாரத்தை கொண்டு வருவதே இந்த ஆளும் தரப்பினர்களிடம் காணப்படும் ஒரே தீர்வாக அமைந்து காணப்படுகின்றது.

புதிய அரசியல் கலாசாரத்தை கொண்டு வருவோம் என மக்களுக்கு வாக்குறுதிகள் பல வழங்கி ஆட்சிக்கு வந்த இவர்கள், சிவில் பாதுகாப்பு குழுக்கள், இளைஞர் கழகங்கள் மீது அழுத்தம் கொடுத்து, மக்கள் விடுதலை முன்னணி கட்சியின் கட்டமைப்பை கீழ் மட்டத்தில் பலப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இவை அனைத்தையும் அவர்கள் பெலவத்தை கட்சி காரியாலயத்தில் இருந்து மேற்கொண்டு வருவதை வெட்கமில்லாமல் ஏற்றும் கொள்கின்றனர்.

இவை சமூகத்தில் அமைந்து காணப்படும் ஜனநாயக அமைப்புகளாகும். ஜனநாயக அமைப்புகள் ஊடாக கட்சி அரசியலை பலப்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு இவர்கள் மாறு செய்கின்றனர். மக்கள் இந்த கலாசாரத்தை எதிர்பார்க்கவில்லை.

அரசாங்கம் தற்சமயம் ஐஆகு ஐ திருப்திப்படுத்தும் விதமாக செயற்பட்டு வருகிறது. ஐஆகு விதித்த இலக்கையும் தாண்டி, அரச வருவாயை ஈட்டிக் கொண்டாலும், அதனை மக்களுக்கு பயனளிக்கும் விதமாக நிவாரணங்கள் எதனையும் இதுவரையில் பெற்றுக் கொடுக்கவில்லை. வரிகளை அதிகரித்து, செலவினங்களைக் குறைத்துக் கொண்டமையினால் இவ்வாறு ஏற்பட்டுள்ளது.

அபிவிருத்திக்கும், நலன்புரித் திட்டங்களுக்குமான நிதியை ஒதுக்காது, வரிகளை அதிகரித்து, திறைசேரியை நிரப்புவதால் பயனில்லை. செலவுகளைக் குறைத்து, வரி வருவாயை அதிகரித்து அதன் மூலம் பில்லியன் கணக்கான நிதியை சேமிப்பது வீரதீர செயல் அல்ல என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மீள்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இருப்பினும், இது தொடர்பாக சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் எனக் கூறப்படும் சிலரால், வீணான சந்தேகங்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தி ஏற்படுத்தும் விதமாக முறைமுறை முரண்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதின் பின்னணியில், மீள் விசாரணை கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே முறைமையான விசாரணைகளின் அடிப்படையில், இது தற்கொலை என்ற முடிவுக்கு வந்திருந்த போதிலும், தற்போது இது ஒரு கொலை எனக் கருதி மீள் விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்தகைய கோரிக்கையின் அடிப்படையில் வருகின்ற எந்தவொரு மீள் விசாரணைக்கும் கல்லூரி பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

இவ்வாறு நடக்கும் இந்த நிகழ்வினை ஒரு பெரிய பிரச்சினையாகச் சமூகமயப்படுத்தவும், இதன் மூலம் தனிப்பட்ட இலாபங்களை அடைந்து கொள்ளவும் சமூக ஊடகங்களில் செய்யப்படும் காரியங்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க, எமது நிர்வாகம் சட்டத்தரணிப் பொலிஸ்மா அதிபருக்குத் தேவையான முறைப்பாடுகளை வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்கின்றது.

அதே நேரம், இந்தத் துரதிஷ்டவசமான நிகழ்வை மையப்படுத்தி இலாபம் ஈட்டும் நோக்கிலும், சமூகத்தைக் குழப்பும் நோக்கிலும் எந்தவொரு நீசமும் செயற்படக் கூடாது என்ற கோரிக்கையை விடுப்பதுடன், ஏனையோர் அத்தகைய செயற்பாடுகளுக்குப் பிழையாக வழிநடத்தப்படாமல் இருக்க வேண்டும் என்பதையும் வேண்டிக்கொள்கிறோம்.

**வாசகர்களே!**


உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அவிபிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடையோர் 071 89 666 13 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

உதயம்







www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2025 NOVEMBER 16 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# அல் குர்ஆன் விடயத்தில் அரசு சாதகமான தீர்மானம் எடுக்க வேண்டும்

சவுதி அரேபியாவில் இருந்து 2 வருடங்களுக்கு முன் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டு சுங்கத் திணைக்களத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அல்குர்ஆன் பிரதிகளை வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பாது விரைவில் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முஸ்லிம்கள் தரப்பில் பலமாக வலியுறுத்தப்படுகின்றது. தடுத்து வைக்கப்பட்டுள்ள அல்குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்புகள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்ததை அடுத்து முஸ்லிம் தரப்பில் இது தொடர்பாக அதிருப்தியையும் ஆத்திரத்தையும் தெரிவித்துள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள குர்ஆன் பிரதிகளை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழுவின் பரிந்துரைகளை நிராகரித்து நாட்டில் வாழும் 25 லட்சம் முஸ்லிம்களது சமய உரிமைகளை பாதுகாக்கும் வகையில் இந்த விடயத்தில் ஜனாதிபதி அனுரகுமார தலையிட்டு குர்ஆன் பிரதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளையும் சேர்ந்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்துள்ளதோடு, அதனை முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூக அமைப்புகளும் அங்கீகரித்துள்ளன. வியாழனன்று இரவு இது தொடர்பாக முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், உலமாக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட முக்கிய கூட்டம் ஒன்றில் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக ஏற்படுத்தப்பட்டுள்ள தடை விதிகள் தொடர்பில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய சமூகத்தின் முக்கியஸ்தர்களை கொண்ட பிரமுகர்கள் குழு ஒன்று உடனடியாக ஜனாதிபதியை சந்தித்து கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாட்டுக்குள் வந்துள்ள குர்ஆன் பிரதிகளை திருப்பி அனுப்புவது நாட்டுக்கு ஆரோக்கியமானதாக அமையாது.

மீளாய்வுக்குழு இதற்கு தடை விதிப்பதற்காக கூறும் காரணங்கள் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. ஏனெனில் விடுவிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள அல்குர்ஆன் பிரதிகளை ஒத்த லட்சக்கணக்கான பிரதிகள் நாட்டுக்குள் தற்போது பாவனையில் உள்ளது என்பதை இதற்கு தடைவிதிப்பவர்கள் அறியாதிருப்பது கவலைக்குரியதாகும். தேசிய மக்கள் சக்தி அரசை பதவிக்கு கொண்டு வருவதற்கு இந்நாட்டு முஸ்லிம்கள் ஆதரவு வழங்கியதனை அரசு மறந்திருக்க மாட்டார்கள்.

இக் குர்ஆன் விவகாரத்தில் அரசாங்கம் இதுவரை மென்மை போக்கை கடைப்பிடிப்பது கண்டிக்கத்தக்கது. மீளாய்வுக் குழுவே இதற்கு பிரச்சினையாக இருப்பதாக அரசு தரப்பிலும் தெரிவிக்கப்படுகின்றது. மீளாய்வுக்குழுவின் பரிந்துரைகளை நிராகரிக்கும் தீர்மானத்தை அரசுக்கு எடுக்க முடியும் என முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம் சிவில் சமூக அமைப்புகளும் தெரிவித்துள்ளன. மீளாய்வுக் குழுவின் பரிந்துரைகளை நிராகரித்து 25 லட்சம் முஸ்லிம்களின் கோரிக்கையான குர்ஆன் பிரதிகள் விடுவிப்பை அரசாங்கம் தாமதமின்றி சாத்தியமாக்க வேண்டும். நாட்டில் இருந்து குர்ஆன் பிரதிகள் தவறியேனும் திருப்பி அனுப்பப்படுமாயின் முஸ்லிம் உலகுக்கு இலங்கையிலிருந்து வரும் ஒரு தவறான சமிஞ்சையாக அது தென்படலாம்.

முஸ்லிம் உலகுக்கும் அரசுக்கும் இடையே இருக்கும் நட்புறவுகளுக்கும் அது பாதகமாக அமையலாம். சில நேரம் அரச விரோத சக்திகள், முஸ்லிம் உலகுக்கும் தற்போதைய அரசுக்கும் இருக்கின்ற நெருக்கமான உறவை சீர்குலைப்பதற்கும் இதனை உபயோகப்படுத்தலாம். எனவே அரசாங்கம் இந்த விடயத்தில் உடனடியாக தலையிட்டு இந்த குர்ஆன் பிரதிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாம் வேண்டுகோள் விடுகின்றோம்.

**மர்மம்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றதாகவும் சுபஹ் முடிந்து தேநீர் அருந்த மாணவர்கள் வரும் வரை அவர் வராததால் மாணவர்கள் தேடிப் பார்க்கும் போது அவர் மலசல கூடத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டதாகவும். உடனடியாக அவரை நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பெற்றோருக்கு காலை 6.10மணியலவில் மகனுக்கு சுகயீனம் உடனடியாக மத்ரஸா வரவும் என அதிபரினால் தொ.பே.அழைப்பு வந்து பெற்றோர் போய்க்கொண்டிருக்கும் போது இடையில் மத்ரஸ ாவிலிருந்து மீண்டும் ஒரு அழைப்பை எடுத்து நீங்கள் வைத்தியசாலைக்கு வாருங்கள் என கூறியதாகவும் வைத்தியசாலையில் மகனின் உயிரற்ற சடலத்தையே பார்க்க முடிந்ததாகவும் பெற்றோர் தெரிவித்தனர்.

பெற்றோரின் எவ்வித கையொப்பமின்றியும் சடலத்தை ஒப்படைத்ததாகவும் இது குறித்து கெப்படிபொல பொலிஸில் முறைப்பாடு செய்தாலும் அவர்கள் அதனை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை என்றும். வைத்தியசாலையில் அவர்களே மையித்தை விடுவித்து கொடுத்தாகவும், பிரேத பரிசோதனை அறிக்கையில் கழுத்து முறிந்தோ, உடைந்தோ காணப்படவில்லை என குறிப்பிட்டுள்ளதாகவும் பெற்றோர் மேலும் தெரிவித்தனர்.

இதற்காக சாதாரண விசாரணை மேற்கொண்டு நியாயத்தைப் பெற்றுத்தர வேண்டும் எனக்கோரி 2025.11.14 ஜு/ம்ஆ தொழுகையின் பின்னர் ஹாலி எலை ஜும்ஆ பள்ளி முன்பாக அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்றும் பெற்றோர், மற்றும் ஊர் ஜமாத்தினரால் மேற்கொள்ளப்பட்டதுடன் இவ்விடயமாக ஊவா பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர், பண்டாரவளை பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஆகியோருக்கு முறைப்பாடுகளை பெற்றோர் வழங்கியுள்ளனர்.

தமது மகனுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும், இனிமேல் இதுபோன்ற சம்பவங்கள் ஏனைய மத்ரஸா மாணவர்களுக்கு நேர்ந்திடக் கூடாது என ஹம்தியின் பெற்றோர் கேட்டுக்கொள்கின்றனர்.



**அரச...**
**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

உத்தரவிடப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தொன் கணக்கிலும் கிலோகிராம் கணக்கிலும் போதைப்பொருட்கள் தொடர்ச்சியாகக் கைப்பற்றப்பட்டு வரும் நிலையிலும், நாட்டில் அவை இன்னமும் பெருமளவில் புழக்கத்தில் இருப்பதை அடுத்து, போதைப்பொருளை ஒழிக்கும் நோக்குடன் அரசாங்கம் புதிய நடவடிக்கைகளை அறிவித்துள்ளது.

இதன் ஒரு பகுதியாகவே குறித்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

**வெளியிடப்படவுள்ள சுற்றறிக்கை**

அவர் மேலும் தெரிவிக்கையில், போதைப்பொருள் புழக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், பாவனைக்கான தேவையை முற்றாக நீக்குவதற்கும் இந்த குழுக்கள் செயற்படும். பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஊடாக அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை நாளை (17) வெளியிடப்படவுள்ளது.

இந்த சுற்றறிக்கையின்படி, ஒவ்வொரு நிறுவனத் தலைவரும் தமது நிறுவனத்தை போதைப்பொருள் அற்ற நிறுவனமாக உறுதிப்படுத்துவது கட்டாயமாகும். போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அல்லது பாவனையாளர்கள் நிறுவனங்களில் இருப்பது கண்டறியப்பட்டால், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைக்கும் பொறுப்பு நிறுவனத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, கல்விச் செயலாளர் ஊடாகவும் நாளை (17) சுற்றறிக்கையொன்று வெளியிடப்படவுள்ளது. இதன்மூலம், அனைத்து பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களிலும் போதைப்பொருள் தடுப்புக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்படவுள்ளது.

தொலைதூர கிராமப் பாடசாலைகளில் கூட போதைப்பொருள் பாவனை குறித்த தகவல்கள் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்றுள்ள நிலையில், இந்த நடவடிக்கை அவசியமாகிறது. தற்போது பல இடங்களில் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போதைப்பொருள் தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் வழங்க வசதியாக 1818 என்ற புதிய உதவி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், தேசிய போதைப்பொருள் சபைக்கான அலுவலகம் ஒன்று எதிர்வரும் 22ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

தற்போது ஜனாதிபதி செயலகம் ஊடாக தற்காலிகமாக 1818 என்ற உதவி இலக்கம் செயற்பட்டு வருதுடன், முதல் 5 நாட்களில் மாத்திரம் சுமார் 1000 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. இந்தத் தகவல்களின் அடிப்படையில் தற்போது சுற்றிவளைப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன என கூறியுள்ளார்.

# கனடாவில் பல்வேறு சந்திப்புக்களில் பங்கேற்ற இல்ஹாம் மரைக்கார்




Amazon College பணிப்பாளர் இல்ஹாம் மரைக்கார் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி, கனடாவிற்கான உத்தியோகப்பூர்வ குழுவின் ஒரு உறுப்பினராக பங்கேற்றார்.

இந்த பயணத்தின் போது, குழுவினர் Montreal, Quebec, Toronto, Saskatchewan, Regina மற்றும் Vancouver நகரங்களில் நடைபெற்ற பல மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்று, கல்வி மற்றும் வணிக துறைகளில் புதிய ஒத்துழைப்புகளை உருவாக்கினர்.

Canada Bureau for International Education (CBIE) Expo நிகழ்வில் பங்கேற்ற இல்ஹாம் மரைக்கார், பல்கலைக்கழக பிரதிநிதிகளுடன் கல்வி வாய்ப்புகள், உதவித்தொகைகள் மற்றும் மாணவர் பரிமாற்ற திட்டங்கள் குறித்து கலந்துரையாடினார்.


Saskatchewan மற்றும் Regina பல்கலைக்கழகங்களுக்கான விஜயங்களின்போது, கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புகளை வலுப்படுத்தி, இலங்கை மாணவர்களுக்கு புதிய வாய்ப்புகளை திறந்தார்.

Montreal மற்றும் Toronto வில், இலங்கை வணிகர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களைச் சந்தித்து, இலங்கையில் முதலீடு செய்வதற்கும் சுற்றுலா மற்றும் வணிக வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும் ஊக்கமளித்தார்.

இந்த சிறப்பான பயணத்தை Ceylon Chamber of Commerce, Sri Lanka - Canada Business Council மற்றும் Canada - Sri Lanka Business Convention ஆகியன ஒருங்கிணைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.







# ஆர் ஜே மீடியா ஊடக வலையமைப்பின் தேசிய “குரல் மகுடம்” விருது விழா





**(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)**

ஆர். ஜே. மீடியா ஊடக வலையமைப்பின் தேசிய ரீதியிலான “குரல் மகுடம்” அறிவிப்பாளர் போட்டி மற்றும் விருது வழங்கல் விழா, அண்மையில் கொழும்பு பொதுநூலகக் கேட்போர் கூடத்தில், ஆர் ஜே மீடியா வலையமைப்பின் பணிப்பாளரும் வானொலி அறிவிப்பாளருமாகிய ஏ.எம்.இன்ஷாப் தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவின் பிரதம அதிதியாக, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை மற்றும் கலாசார பீடாதிபதி, பேராசிரியர் கலாநிதி எம்.எம்.பாஸில் கலந்து சிறப்பித்தோடு கௌரவ அதிதிகளாக, சம்மாந்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ரஸ்மி மூஸா, மனித நேய நட்பணிப் பேரவையின் தலைவர் இர்ஷாத் ஏ.காதர், சிலோன் சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பணிப்பாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய அஸ்மியாஸ் ஷஹீத், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் வை.எம்.நிம்ஸாத், சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.எம்.சமீஹா சபீர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் பிரிவின் தயாரிப்பாளர் இஸ்பஹான் ஷர்ஃப்தீன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் குரல் மகுடம் அறிவிப்பாளர் இறுதிச்சுற்றுப் போட்டியின் நடுவர்களாக இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் செய்தி வாசிப்பாளர்களான ஏ.பி.எம்.நிஸ்ரின், என்.தீபதர்ஷின, இலங்கை முஸ்லிம் மீடியா போரத்தின் பொருளாளர் கியாஸ்.ஏ.புகாரி, வசந்தம் தொலைக்காட்சி மற்றும் வானொலி செய்தி வாசிப்பாளரும் நிகழ்ச்சித் தொகுப்பாளருமாகிய எம்.கவிதா பாரதி, எம்.ஜே.எம்.க்ரி, சக்தி தொலைக்காட்சி மற்றும் சக்தி வானொலியின் நிகழ்ச்சித் தொகுப்பாளர் முஹம்மட் ஷவ்கி உள்ளிட்டவர்கள் குழுவிலும் பங்கேற்றனர்.

இவ்விழாவானது, இரண்டு கட்டங்களாக இடம்பெற்றதுடன், பல துறைகளில் சிறந்து விளங்கிய பெண்கள் கௌரவிக்கப்பட்டதோடு, குரல் மகுடம் அறிவிப்பாளர் போட்டியின் இறுதிச் சுற்றுப் போட்டியாளர்கள், ரமழான் சுவனச்சோலைப் போட்டி வெற்றியாளர்கள் மற்றும் மருதாணிப் போட்டி வெற்றியாளர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அத்தோடு கடந்த கால ஊடகப் பயிற்சி நெறியில் முதல் தர நிலையைப் பெற்ற மாணவர்களுக்கான முதல்தர சிறப்புப் பதக்கங்களும், நடுவர் குழுவினருக்கும், அதிதிகளுக்கும் நினைவுப் பாராட்டுச் சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## "அறிவுக் களஞ்சியம்" போட்டியில் போருதோட்டை அல் - பலாஹ் கல்லூரி, தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை




**( ஐ. ஏ. காதிர் கான் )**

அகில இலங்கை முஸ்லிம் பாடசாலைகளுக்கு இடையிலான “முஸ்லிம் கலாசாரப் போட்டி - 2025” நிகழ்வுகளின் ஓர் பிரிவாக இடம்பெற்ற “அறிவுக் களஞ்சியம்” போட்டி நிகழ்ச்சியில், நீர் கொழும்பு - போருதோட்டை அல் - பலாஹ் கல்லூரி, இரண்டாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றிய மாணவன் எம்.ஆர்.எம். ஸைத், மாணவிகளான எம்.கே.எப். இல்மா, எம்.ஏ. ஹல்பா, எம்.என்.எப். ஆயிஷா, எம்.எல்.என். முஷ்பிரா ஆகியோர் தமது திறமைகளை வெளிப்படுத்தி, இக்கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இப்போட்டி நிகழ்வு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை அனுசரணையில், கொழும்பு - மருதானை, ஸாஹிராக் கல்லூரியில் (01) சனிக்கிழமை இடம்பெற்றது.

குறித்த போட்டி நிகழ்ச்சியில், அல் - பலாஹ் கல்லூரியிலிருந்து பங்குபற்றிய மாணவ மாணவிகளை ஊக்கப்படுத்திய பெற்றோர், ஆசிரியர் குழாம், ஊர் மக்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவருக்கும் கல்லூரி சார்பாக அதிபர் எம்.யூ. பாயிஸ், பிரதி அதிபர்களான சதீஸ்கான், சிஹாமா மொஹமட் ஆகியோர் தமது அன்பான நன்றிகளையும், பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

## ஓட்டமாவடி தாருல் உலூம் மாணவி பாத்திமா சஸ்னி தேசிய சித்திரப் போட்டியில் முதலிடம்

**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

ஓட்டமாவடி தாருல் உலூம் வித்தியாலயத்தில் தரம் 4 இல் கல்வி கற்கும் மாணவி பாத்திமா சஸ்னி தேசிய ரீதியாக INSEE ECOCYCLE அமைப்பு நடாத்திய சித்திரப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் எம்.எல்.பைசல் தெரிவித்தார்.

இவர், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் எஸ்.எம்.கடாபி என்பவரின் புதல்வியாவார்.

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் தனது



ஆற்றலை வெளிப்படுத்தி தேசிய ரீதியில் முதலிடம் பெற்றுக் கொண்டுள்ள மாணவி சஸ்னிக்கு பாடசாலை அதிபர் வாழ்த்துக் களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

## அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் “கல்விக்கு கரம் கொடுப்போம்” வேலைத்திட்டம்



**(மாளிகைக்காடு செய்தியாளர்)**

அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் “கல்விக்கு கரம் கொடுப்போம்” வேலைத்திட்டத்தின் கீழ் அண்மையில் தீ அனர்த்தத்தில் சிக்கி தமது பாடசாலை உபகரணங்களை இழந்த மாணவர்களின் கல்விக்கு கரம் கொடுக்கும் நோக்கில் அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் உறுப்பினர்களின் அன்பளிப்பாக பாடசாலை உபகரணங்களை இழந்த மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள், பாடசாலை கற்றல் உபகரணங்கள், புத்தகப்பை, சப்பாத்து போன்றன கல்முனை அல் அஸ்கர் வித்தியாலய அதிபர் ஏ.எச். அலி அக்பர் ஊடாக மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் உறுப்பினர்கள் சார்பில் தவிசாளர் நூருல் ஹுதா உமர், மத்திய செயற்குழு பிரதம பொருளாளர் எல். முஹம்மட் நிப்றாஸ் ஆகியோர் இந்த அன்பளிப்பை வழங்கி வைத்தனர்.

அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா 2004 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் சமூக நல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதுடன் கல்வி அபிவிருத்திக்கு பல்வேறு பங்களிப்புக்களை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## வர்த்தகர்களுக்கான நுகர்வோர் சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு




**(அஸ்லம் எஸ். மௌலானா)**

சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வியாபார நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கான நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் விசேட விழிப்புணர்வு செயலமர்வு திங்கட்கிழமை (10) சம்மாந்துறை பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.


சம்மாந்துறை பிரதேச சபைத் தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந்த செயலமர்வில் பிரதான வளவாளராக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு அதிகாரி முஹம்மட் ஸாஜீத் ஸமான் கலந்து கொண்டு, வியாபார நடவடிக்கைகளின் போது வர்த்தகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இதன்போது நுகர்வோர் உரிமைகள், பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளில் கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருட்களின் அரசாங்க கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்ட திட்டங்கள் தொடர்பாக ஸ்மார்ட் காணொளி ஊடாக அவர் தெளிவுபடுத்தினார்.

இந்நிகழ்வில் நுகர்வோர் அதிகார சபையின் புலனாய்வு அதிகாரிகளான எம்.எம்.எம் பஸ்மீர்,எ.பி.எம் இர்பான் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

## மாத்தளை மாவட்டத்துக்கான காதி நீதவானாக அஷ்ஷெய்க் இஸ்வார்தீன் நஜாஹி நியமனம்

மாத்தளை மாவட்டத்துக்கான புதிய காதிநீதவானாக அல்ஹாஜ் அஷ்ஷெய்க் ஏ .டப்லிவ் . இஸ்வார்தீன்(நஜாஹி) நீதிச்சேவை ஆணைக்குழுவினால் கடந்த 03 ஆம் திகதியன்று நியமிக்கப்பட்டுள்ளார் உக்குவளை இல 17/1 , மத்திய வீதி , வரகந்தவத்தை வரக்காமுர கிராமத்தைச் சேர்ந்த இவர் வரக்காமுற வரகந்த அப்ரார் ஜும்ஆ மஸ்ஜித் தலைவராகவும் , நலன்புரிச்சங்க உபதலைவராகவும், வரக்காமுற ஜமியத்துல் உலமாச் சபை தனாதிகாரியாகவும் மாத்தளை ஜமியத்துல் உலமாச்சபை உறுப்பினராகவும் இருந்துவருவதுடன் வரக்காமுற சீனி அப்பா தர்காவின் 35 வருடகால முன்னாள் பிரதம இமாமும் சமூக ஆர்வலருமாவார்



# வரவு - செலவுத் திட்டமும் எதிரணிகளின் போராட்டமும்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் 2025.11.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஜனாதிபதி நிதி அமைச்சர் என்ற வகையில் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் 2026 ஆம் ஆண்டிற்கான உத்தேச வருமானம் 05 இலட்சத்து 30,000 கோடி (5300 பில்லியன்கள்) ரூபாய்கள் என்றும் உத்தேச செலவினம் 07 இலட்சத்து 57 ஆயிரம் கோடி ( 7057 பில்லியன்கள்) ரூபாய்கள் என்றும் மதிப்பிடப் பட்டிருக்கின்றது. அத்துடன் வருமானத்தில் இருந்து செலவை கழித்தால் துண்டு விழும் தொகை 175700 (1757 பில்லியன்) ரூபாய்கள் என்று கணிப்பிடப் பட்டிருப்பதோடு இந்த தொகையை உள்நாட்டு வெளிநாட்டு மூலங்களில் இருந்து கடன் பெறுவதன் மூலம் ஈடு செய்வதாக திட்டமிடப் பட்டிருக்கின்றது. அதிலும் உள்நாட்டு மூலங்களில் இருந்து 1522 பில்லியன் ரூபாய்களும் வெளிநாட்டு மூலங்களில் இருந்து 235 பில்லியன் ரூபாய்களுமாகும். இவை கடனாக அல்ல நன்கொடைகளாக வந்து சேரக்கூடிய வைகளாகும்.

ஏதிர்வரும் 2026 ஆம் ஆண்டிற்கான வருமானமும் செலவினமும் இவ்வாறு அமைந்திருந்தாலும் அரச ஊழியர்களின் சம்பள உயர்வின் இரண்டாம் கட்டத்திற்காக 11,000 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் இந்த சம்பள அதிகரிப்பானது 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து வழங்கப்பட இருக்கின்றது. அத்துடன் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்திலும் அதிகரிப்பு செய்யப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற 1350 ரூபா நாளாந்த சம்பளம் 1550 ஆக அதிகரிக்கப்படுவதோடு அரசாங்கத்தால் 200 ரூபா வருகை கொடுப்பனவாக வழங்கப்படும் என்றும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மஹாபொல கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

இன்னும் பல சலுகைகள் வரப்பிரசாதங்கள் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன.

இவ்வாறாக பார்க்கின்ற போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஆதரிப்பவர்கள் இது ஒரு நிவாரணங்கள் நிறைந்த மக்கள் நலன் சார்ந்த வரவு செலவுத் திட்டம் என்று வர்ணித்துள்ளனர். ஆனாலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா இந்த வரவு செலவுத் திட்டமானது சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டதாகும். மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். பதவிக்கு வர முன்னர் வழங்கிய வாக்குறுதிகள் எதையும் அரசாங்கம் நிறைவேற் றவில்லை என்று குற்றம் சுமத்தி இருக்கின்றார். எதுவானாலும் கடந்த 2025 ஆம் ஆண்டில் உள்நாட்டு இறைவரி திணைக்களம் அதிகப்படியான வரி வருமானத்தை ஈட்டி இருக்கின்றது. அதனால் வரவு செலவு பற்றாக்குறை குறிப்பிட்ட அளவிற்கு குறைவடைந் திருக்கின்றது என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா பாராளும ன்றத்தில் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் இவ்வாறிருக்க எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கின்ற குறிப்பிட்ட சில அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து அரசாங்கத்தின் போக்கை கண்டித்து எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் 2025.11.21 ஆம் திகதி வெள்ளிக் கிழமை கொழும்பிற்கு மாபெரும் போராணியொன்றை நடத்த திட்டமிட்டு வருகின்றனர். அதற்கான திட்டமிடல்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்த பேரணியில் ஐ.தே. கட்சி, பொதுஜன பெரமுன கட்சி, ஸ்ரீ.ல.சு. கட்சி, பிவிதுரு ஹெல உருமய கட்சி உட்பட பல அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. ஆனாலும் இந்த அரச எதிர்ப்பு பேரணியில் பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாசா தலைமையிலான தேசிய மக்கள் சக்தி (சஜப) இணைந்து கொள்வதென்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

பெரும்பாலும் சஜித் தலைமையிலான சஜப வட்டாரங்களில் இருந்து கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் அக்கட்சி இந்த எதிர்ப்பு பேரணியில் இணைந்து பங்குபற்றாது என்று அறிய முடிகின்றது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி 21 ஆம் திகதி நடத்தப்படட இருக்கின்ற எதிர்ப்பு ஊர்வலம் பேரணி என்பவற்றில் இணையா ததற்கு காரணம் இந்த பேரணி ஐ.தே. கட்சியின் தலைமையில் ஏற்பாடு செய்யப்படுவதாகும். ஐ.தே.க. வின் ஆசன பலம் பாராளுமன்றத்தில் ஒரே ஒரு பொனஸ் ஆசனம் மட்டுமாகும். அத்துடன் அதனோடு இணைந்துள்ள பொதுஜன பெரமுன கட்சியின் ஆசன பலமும் பாராளுமன்றத்தில் ஒரே ஒரு அசனமாகும். அத்துடன் உதய கம்மம்பிள்ளை மற்றும் ஸ்ரீ.ல.சு. கட்சி மற்றும் இதர கட்சிகளுக்கு பாராளுமன்றத்தில் ஆசனங்களே இல்லை.

இவ்வாறிருக்க எத்தகைய பலமும் இல்லாத கட்சிகள் ஒன்றிணைந்து எற்பாடு செய்யும் இந்த பேரணியில் ஓரளவுக்கு 40 இற்கும் மேற்பட்ட ஆசன பலத்தை கொண்ட சஜப இணைவதென்பது அக்கட்சிக்கு ஒருவிதமான கௌரவ குறைவை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. அதிலும் ஏற்கனவே திருடர்கள் என்றும் திருடர்களை அரவணைத்தவர்கள் என்றும் பாரிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கடுமையான எதிர்ப்புக்களை சஜித் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ள அதே கட்சிகளுடன் கைகோர்த்து இவ்வாறு பேரணி நடத்தும் போது தற்போதைய அரசாங்கம் இந்த சந்தர்ப்பத்தை மிக நல்ல முறையில் பயன்படுத்தி ஓரளவுக்காவது மேல் எழுந்து வருகின்ற சஜப வின் செல்வாக்கை மேலும் சரித்து தவிடு பொடியாக்கி விடலாம் என்ற அச்சமும் நிலவுகின்றது.

அதுமட்டுமல்லாமல் ஐ.தே.க. இப்போது மீள் புணரமைப்பு செய்யப்பட்டு வருகின்ற ஒரு கட்சியாக மாறி இருக்கின்றது. ஏற்கனவே இந்த நாட்டை ஆட்சி செய்த அரசியல் விருட்சமாக இருந்த கட்சி நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஒரு ஆசனத்தைக் கூட தேர்தல் மூலம் பெரும் அளவிற்கு இல்லாமல் மோசமான முறையில் தோல்வியை சந்தித்து சாவை கண்டிருக்கின்றது. அத்தனை பின்னடைவுக்கும் சரிவுக்கும் காரணம் அதன் தலைவராக இருக்கும் ரனில் விக்கிரமசிங்கா தான் என்ற மோசமான உணர்வு நாட்டில் பரவி இருக்கின்றது. இந்நிலையில் மற்றுமொரு தரப்பு ஐ.தே.க. வுடன் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இணைய வேண்டும். அவ்வாறு இணைந்தால் மீண்டும் ஆட்சியை பிடிக்க முடியும் என்று கூறி வருகின்றனர்.

ஆனாலும் அவ்வாறான இணைவுக்கு சஜப தரப்பில் சில உறுப்பினர்கள் தயாராக இல்லை. பூச்சியத்திற்கு பின்னடைவு கண்ட கட்சியுடன் ஒரு சந்தர்ப்பத்தில் 45 இலட்சத்திற்கு மேல் வாக்குகளை பெற்றிருந்த அதுவும் எழுச்சி பெற்று வரும் கட்சியை கொண்டு போய் ஐ.தே.க. வுடன் மீண்டும் இணைக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றனர். இந்நிலையில் ஐ.தே.க. வினர் இந்த பேரணி தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் சஜப வில் இருக்கின்றவர்கள் ஐ.தே.க. வுடன் கைகோர்த்து பேரணிக்கு ஆதரவு தெரிவிக்காவிட்டால் அதன் ஆதர வாளர்கள் அனைவரும் ஐ.தே.க. வுடன் இணைந்து விடுவார்கள். சஜித் தலைமையிலான சஜப வில் இருப்பவர்கள் ஐ.தே.க. ஆதரவாளர்கள் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆதனால் சஜித் பிரேமதாசாவுக்கு இப்போது பெரும் தலையிடி ஏற்பட்டிருக்கின்றது. ஐ.தே.க. வினரின் மானசீக ரீதியான வார்த்தை பிரயோகங்களால் சஜித் ஆதரவாளர்கள் படிப்படியாக சரிந்து போய் ஐ.தே.க. வுடன இணைந்து விடாமல் கட்சிக்குள் பாதுகாப்பு அரண் அமைக்க வேண்டிய பொறுப்பும் இருக்கின்றது. அதே நேரம் தொங்க கயிறு இல்லாத சிறிய கட்சிகள் எப்படியாவது அரச எதிர்ப்பு சந்தர்ப்பத்தை பயன்படுத்தியே தமது பிரபல்யத்தை நிலைநிறுத்த வேண்டி இருக்கின்றது. ஏற்கனவே தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி காரணமாக துடைபட்டு போன அரசியல் கட்சிகளும் தலைவர்களும் மீண்டும் நாமல் ராஜபக்ஷ வுடன் இணைந்து அடுத்த ஜனாதிபதி நாமல் ராஜபக்ஷ தான் என்று கூக்குரல் இட ஆரம்பித்துள்ளனர். சஜித் பிரேமதாசாவும் அடுத்த ஜனாதிபதியாக வர இருப்பது தான்தான் என்று மார் தட்டும் நிலையில் இவ்வாறான ஒன்றிணைவும் பேரணி ஏற்பாடும் புதிய தலையிடியை ஏற்படுத்ததி இருக்கின்றது.

ஆனாலும் இத்தகைய பேரணியால் 158 ஆசன பலத்துடன் பெரு விருட்சமாக மாறி இருக்கின்ற தேசிய மக்கள் சக்தியை சரிக்க முடியுமா என்ற கேள்வியும் எழுகின்றது. அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் 2025.11.13 ஆம் திகதி கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவில் நடைபெற்ற ஜே.வி.பி. யின் உயிர் நீத்த தியாகிகளை நினைவு கூறும் 36 ஆவது கார்த்திகை (ஏப்ரில்) வீரர் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற் றுகையில் அரசாங்கத்திற்கு எதிரான எத்தகைய சவாலுக்கும் அஞ்ச மாட்டோம். அனைத்து விதமான எதிர்ப்பலைகளையும் முறியடிப்போம் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் எதிர்க்கட்சி அணியின் சவால்களை சந்திக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்பது தெரிகின்றது.





# வாக்குறுதிகள் காப்பாற்றப்படாத வரவு செலவுத் திட்டம்

## குற்றஞ்சாட்டும் ஹக்கீம்

எம்.என்.எம்.யஸீர் அறபாத்

பாராளுமன்றத்தில் (08) சமர்பிக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட உரையில் ODI அறிக்கையை மேற்கோள் காட்டி, CEB திருட்டு மற்றும் உள்ளூர் அபிவிருத்தி முறைகேடுகள் பற்றி கௌரவ ரவூப் ஹக்கீமின் பாராளுமன்ற உரை அமைந்திருந்தது.

கௌரவ சபாநாயகர் அவர்களே, வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு குறித்த எனது வாதங்களுக்கு முன்னுரையாக, நான் ODI (வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனம்) என்ற சிந்தனைக் குழுவின் வெளியீட்டிலிருந்து மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

இதில் பங்களித்தவர்கள் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுனர் இந்திரஜித் குமாரசுவாமி மற்றும் தற்போதைய ஆளுனர் நந்தலால் வீரசிங்க, அத்துடன் புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் பேராசிரியர் சாந்தா தேவராஜன் ஆகியோரும் அடங்குவர்.

இந்த புத்தகத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

"பொருளாதாரத்தின் முன்னேற்றம், உறுதியான ஸ்திரப்படுத்தல் நடவடிக்கைகள், ஐஆகு திட்டம் மற்றும் இடைக்கால இந்திய உதவி ஆகியவற்றின் கலவையுடன் சேர்ந்துள்ளது." அத்துடன், அவர்கள் கூறுகிறார்கள், "நாட்டின் 17வது ஐஆகு திட்டம், இதுவரை இலங்கையில் இல்லாத மிகவும் கடுமையான கொள்கை நிபந்தனைகளையும் சிக்கன நடவடிக்கைகளையும் கொண்டு வந்துள்ளது." இது வருவாய் அடிப்படையிலான நிதி ஒருங்கிணைப்பில் கவனம் செலுத்துகிறது மற்றும் வரி வருவாயை கணிசமாக உயர்த்துவதையும், பயன்பாட்டு விலைகளை அதிகரிப்பதையும், வட்டி விகிதங்களை உயர்த்துவதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதையும், பணவியல் நிதியளிப்பை அகற்றுவதையும், ஒரு சுயாதீன மத்திய வங்கியை உறுதி செய்வதையும், நெகிழ்வான மாற்று விகிதம் மற்றும் பிற நடவடிக்கைகள் மூலம் வெளிநாட்டு நாணய கையிருப்பை மீண்டும் கட்டியெழுப்புவதையும், போதுமான மூலதனம் கொண்ட வங்கிகள் மற்றும் ஒரு புதிய வங்கிச் சட்டம் மூலம் நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாப்பதையும், சிறந்த நிதி வெளிப்படைத்தன்மை மற்றும் பொது நிதி முகாமைத்துவம் மூலம் ஊழல் அபாயத்தைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இது 2023 இல் ஐஆகு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### பொருளாதார ஸ்திரப்படுத்தலின் ஆரம்பகட்ட கடின உழைப்பு மற்றும் இந்திய உதவி

இந்த விஷயங்கள் அனைத்தும் அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்பே நடந்தன. மிகவும் கடினமான வேலைகள் முந்தைய அரசாங்கத்தால் முடிக்கப்பட்டுவிட்டன.

மேலும், இது கூறுகிறது, "2022 இன் முதல் 6 மாதங்களில் அத்தியாவசிய உணவு, எரிபொருள் மற்றும் மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு நிதியளிக்க இலங்கை, இந்தியாவிடம் இருந்து பாலமாக நிதி உதவியை நாடியது. 3.8 பில்லியன் மதிப்புள்ள இந்திய உதவி, கடன் வரிகள் மற்றும் ஒத்திவைக்கப்பட்ட கடன்கள் மற்றும் மானியங்கள் மூலம் இலங்கைக்குள் வந்தது. சமீப காலங்களில் எந்தவொரு நாட்டிற்கும் இதுவே இந்தியாவின் மிகப்பெரிய இருதரப்பு திட்டமாகும்." அது இல்லையென்றால், நாம் ஒரு மோசமான சூழ்நிலையில் இருந்திருப்போம்.

இந்த விடயங்கள் அனைத்தும் இந்த அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்பே நடந்தன. எனவே, இப்போது அவர்கள் ஐஆகு ஆல் அமைக்கப்பட்ட விதிகளைத் தொடர்ந்து, மிகவும் கீழ்ப்படிதலுடன் அதன் கட்டளைகளைப் பின்பற்றுகிறார்கள்.

### மின் கட்டணங்கள் மீதான முரண்பாடு மற்றும் ஜனாதிபதியின் தவறவிட்ட வாக்குறுதி

இப்போது நாம் பார்த்தால், நான் பேசிய செலவினங்களைப் பிரதிபலிக்கும் விலை நிர்ணய சூத்திரங்களைப் பார்த்தால், CEB (இலங்கை மின்சார சபை) செலவினங்களுக்கு ஏற்ப வெளியேறும் விகிதங்களை அதிகரிக்கத் தொடங்கியது. அது மட்டுமல்லாமல், அசல் 2022 இல் நஷ்டம் 298 பில்லியன் என்று கபீர் ஹாஷிமி குறிப்பிட்டார், ஆனால் 2024 இல் 1.44 பில்லியன் இலாபம் உள்ளது. எனவே, 298 பில்லியன் நஷ்டத்திலிருந்து ஒரு பில்லியன் இலாபம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தேர்தலின்போது ஜனாதிபதி நுகர்வோருக்கு என்ன உறுதியளித்தார்? அவர், "மின்சார கட்டணங்களை 30மூ குறைப்போம்" என்றார். அது நடந்ததா?

ஏனென்றால், IMF உங்களை அதைச் செய்ய விடாது. அதைவிட மோசமாக, திரட்டப்பட்ட கடன் சேர்க்கப்பட வேண்டும் என்று IMF வலியுறுத்தியது. எனவே, திரட்டப்பட்ட அனைத்து கடன்களும் சேர்க்கப்பட்டுள்ளன, மேலும் நுகர்வோர் இதற்கெல்லாம் பணம் செலுத்துகிறார். எனவே, ஜனாதிபதி உறுதியளித்ததை அவர் ஒருபோதும் செய்யவில்லை. நிச்சயமாக, நேற்று ஒரு மிகவும் கவர்ச்சியான பேச்சு நிகழ்த்தப்பட்டது, ஆனால் வாக்குறுதிகள் காப்பாற்றப்படவில்லை.

இலங்கை மின்சார சபையின் (CEB) "மாபெரும் திருட்டு" பற்றிய வெளிப்பாடு

இப்போது நான் மற்றுமொரு முக்கியமான காரணிக்குச் செல்ல விரும்புகிறேன், அது CEB பற்றியது. இப்போது பொது வெளியில், நமது தேசத்தின் மின்சக்தி திருட்டு தொடர்பான பிரச்சினை குறித்து ஒரு விவாதம் உள்ளது. இது "இந்த குடியரசின் வரலாற்றில் பொதுப் பணத்தின் மீது நடத்தப்பட்ட மிகவும் தைரியமான, கணக்கிடப்பட்ட மற்றும் மனசாட்சியற்ற கொள்ளை" என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

நாம் பார்ப்பது வெறும் கணக்குத் தவறு அல்ல. நான் சிலோன் மின்சார சபையின் மீது நடத்தப்பட்ட ஒரு "மாபெரும் திருட்டை" பற்றி பேசுகிறேன், இது ஒரு குழுவால், ருனு ஜயவர்தன தலைமையில், பல தசாப்தங்களாக நடத்தப்பட்டது. இவர் உள்நுழைவு அணுகல் மற்றும் நம்பிக்கை பொறுப்பு ஆகியவற்றை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி, நாட்டிலிருந்து பில்லியன்களை உறிஞ்சினார். இது யூகமல்ல. இது இப்போது ஒரு கண்டுபிடிப்பு. இது இந்த நாடாளுமன்றத்திற்குள் நடக்கிறது, விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இது இப்போது பொது வெளியில் உள்ளது.

### டுவுடு ஹோல்டிங்ஸ் - திருட்டின் உடற்கூறியல்

இந்தத் திருட்டின் உடற்கூறியல் பற்றி பேசுகிறேன். 1980 இல், CEB பொது நலனுக்காக லங்கா ட்ரான்ஸ்ஃபார்மர்ஸ் லிமிடெட் (LTL) ஐ நிறுவியது. இது ஒரு அரசுக்கு சொந்தமான நிறுவனம், அதன் பங்குகளில் 70% CEB க்கு சொந்தமானது. காலப்போக்கில், வெளிநாட்டு பங்குதாரர்கள் நிறுவனத்திலிருந்து வெளியேற விரும்பினர்.

என்ன நடந்தது? ஊநுடீ தனது உரிமையான பங்கை திரும்பப் பெறுவதற்குப் பதிலாக, நளீந்த இளங்கோன் என்ற ஒருவரால் தலைமை தாங்கப்பட்ட சபை, பணப்புழக்கக் கட்டுப்பாடுகளைக் காரணம் காட்டி பங்குகளை வாங்குவதை மறுத்தது. அது வெறும் 500 மில்லியன் மட்டுமே.

ஊநுடீ "எங்களால் இந்த பணத்தை செலுத்த முடியாது, எங்களிடம் பணப்புழக்கக் கட்டுப்பாடுகள் உள்ளன" என்றது. பிறகு என்ன நடந்தது? துரோகம் வந்தது. ஊநுடீ மற்றும் டுவுடு ஆகிய இரண்டிற்கும் தலைவராக இருந்த திரு. நலீந்த, இந்த பங்குகளை ஒரு தனிப்பட்ட நம்பிக்கையான LTG ESOT க்கு மாற்றுவதற்கு வசதி செய்தார், இது இந்த திட்டத்தை நடத்திய உள்ளடக்க நபர்களால் கட்டுப்படுத்தப்பட்டது. இந்த நம்பிக்கை, இப்போது பேரு பிரைவேட் லிமிடெட் என மறுபெயரிடப்பட்டுள்ளது, 15 பொறியியலாளர்கள் கொண்ட "கொள்ளை கும்பலால்" 82% க்கு சொந்தமானது. அவர்கள் இப்போது LTL ஹோல்டிங்ஸின் கிட்டத்தட்ட 30% க்கு நன்மை பயக்கும் உரிமையாளர்கள், ஒரு ரூபாயையும் முதலீடு செய்யாமல். இது எப்படி நடக்கிறது?

இது மிகவும், மிகவும் தீவிரமான ஒரு விடயம் திருடப்பட்ட பொதுப் பணத்தை மீட்பதற்கான கோரிக்கை

இந்த கிட்டத்தட்ட 30% பங்கின் மதிப்பு NDB இன்வெஸ்ட்மென்ட் வங்கி மற்றும் CTLSC கேப்பிட்டல் பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றால் செய்யப்பட்ட சுயாதீன மதிப்பீட்டின்படி, இலங்கை ரூபா 34.5 பில்லியன் மற்றும் 64.5 பில்லியன் ரூபாய்க்கு இடையில் மதிப்பிடப்பட்டுள்ளது.

நான் இந்த ஆவணங்கள் அனைத்தையும் சமர்ப்பிக்கப் போகிறேன். 2018 முதல், இந்த கும்பல் கிட்டத்தட்ட 5 பில்லியன் ஈவுத்தொகையைப் பெற்றுள்ளது. இவை அனைத்தும் பொது ஒப்புதல் இல்லாமல், வெளிப்படைத்தன்மை இல்லாமல் மற்றும் பொறுப்புக்கூறல் இல்லாமல் ஊநுடீ இன் இறைமை வலிமையைப் பயன்படுத்துவதன் மூலம் சாத்தியமானது. அவர்கள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் கணக்காய்வு தலைமை அதிகாரியின் கணக்காய்வுக்கு கூட தங்களை உட்படுத்திக் கொள்வதில்லை.

அவர்கள் நீதிமன்றங்களில் வழக்கு மேல் வழக்கு தாக்கல் செய்கிறார்கள். மேலும், அமைச்சரவை உறுப்பினர்களில் ஒருவர் இதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து, வழக்கை வாபஸ் பெற்றார் என்பது ஒரு அவமானம். அவர் ஏன் வழக்கை வாபஸ் பெற்றார்? அவர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிறகு வழக்கை வாபஸ் பெற்றார். இது எல்லாம் நடந்தது. அவர்கள் இதை ஒரு "மேலாண்மை கையகப்படுத்தல்" என்று அழைக்கிறார்கள், ஆனால் இது மக்களுக்கு துரோகம். நாம் டுவுடு ஹோல்டிங்ஸ் மற்றும் அதன் பங்கு பரிமாற்றங்கள் குறித்து முழுமையான தடயவியல் கணக்காய்வை கோர வேண்டும், இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவுக்கு இந்த வழக்கை உடனடியாகப் பரிந்துரைக்க வேண்டும், மேலும் அரசிற்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் ஊழியர்களின் நம்பிக்கையை எதிர்காலத்தில் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்க சட்ட சீர்திருத்தம் தேவை. இது திருடப்பட்ட பில்லியன்களை மீட்பது மட்டுமல்ல் இது பொது நம்பிக்கையை மீட்டெடுப்பதைப் பற்றியது. எவ்வளவு சக்தி வாய்ந்தவராக இருந்தாலும், யாரும் அரசைக் கொள்ளையடித்து தப்ப முடியாது என்ற செய்தியை அனுப்புவதைப் பற்றியது. இது ஒரு மிக மிக முக்கியமான வெளிப்பாடு.

கடந்த கால ஊழல்களை எதிர்த்துப் போராடிய எதிர்க்கட்சி – ஈ-விசா ஊழல்

கடந்த காலத்தில், நாங்கள் கடந்த ஆட்சியின் போது நடந்த ஈ-விசா ஊழலை தைரியமாக சவால் செய்தோம். நாங்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றோம், இப்போது குடிவரவு கட்டுப்பாட்டாளர் நீதிமன்ற உத்தரவுக்கு கீழ்ப்படியாததால் நீதிமன்ற அவமதிப்புக்காக தண்டிக்கப்பட்டு சிறையில் உள்ளார், மேலும் வழக்கு விரைவில் விசாரணைக்கு வர உள்ளது. சமீபத்தில், அரசாங்கத்தின் ஒரு உறுப்பினர் இது தங்கள் சாதனை போல சுட்டிக் காட்டினார், ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்களான நாங்களே நீதிமன்றத்திற்குச் சென்று அதை சவால் செய்து, இறுதியாக ஒப்பந்தத்தை ரத்து செய்தோம்.

எந்தவிதமான வெளிப்படைத்தன்மையும் இல்லாமல் வழங்கப்பட்ட அந்த ஒப்பந்தம்,நாங்கள் ஒப்பந்தத்தை நீடிக்க அனுமதித்திருந்தால் இறுதியாக KO IMF பிணை எடுப்பிலும் மூன்றில் ஒரு பகுதியை அவர்களால் சம்பாதித்திருக்க முடிந்திருக்கும். எனவே, நாங்கள் நீதிமன்றத்திற்குச் சென்று அதை சவால் செய்தோம். நிச்சயமாக, அந்த வழக்கில் வாதங்கள் நிலுவையில் உள்ளன.

### சமூக அபிவிருத்தி சபைகள் மீதான அக்கறை

இதற்கிடையில், இந்த வரவு செலவுத் திட்டத்தில் உள்ள சில முன்மொழிவுகளை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக, அரசாங்கத்தின் ஒரு பெண் உறுப்பினர் இந்த புதிய சமூக அபிவிருத்தி சபைகள் பற்றி பேசினார், அவை ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் உண்மையான அபிவிருத்தி தேவைகள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காண நிறுவப்பட உள்ளன.

இந்த சபைகளால் அடையாளம் காணப்பட்ட அபிவிருத்தி தேவைகளுக்கு ஏற்ப அரசாங்கத்தின் பிராந்திய அபிவிருத்தி திட்டங்களை திட்டமிட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந்த சபைகள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன?

சில பகுதிகளில் சபைகள் உருவாக்கப்படத் தொடங்கியுள்ளன. அரசாங்க உறுப்பினர்கள் சென்று இந்த சபைகளை உருவாக்குகிறார்கள். வறுமையை ஒழிப்பதற்கான தேசிய பிரச்சாரத்தின் கீழ் ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தி திட்டத்தை நாடு முழுவதும் செயல்படுத்த, ஜனாதிபதி 20,000 மில்லியன் ஒதுக்கீடு செய்வதாகக் கூறினார். அத்துடன் 4,250 மில்லியன் ஒதுக்கீடுகளும், மொத்தம் சுமார் 25,000 மில்லியன் பிரஜாசக்தி திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

எனவே, இந்த சபைகள் உருவாக்கப்படுகின்றன, மேலும் அரசாங்க உறுப்பினர்கள் சென்று தோல்வியடைந்த உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களை இந்த சபைகளின் தலைவர்களாக நியமிக்கிறார்கள். இது எப்படி நடக்கும்? வெளிப்படைத்தன்மை எங்கே?

நீங்கள் அனைவரும் உங்கள் சொந்த தோல்வியடைந்த வேட்பாளர்களை தலைவராக்க பயன்படுத்துகிறீர்கள். இது அக்கறைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை ஆகிய இடங்களில் நடக்கிறது. இதுதான் அரச நிதியை செலவழிக்கும் வழி. கிராமப்புற அளவில் இது நடக்காது. நீங்கள் அனைவரும் உங்கள் சொந்த தோல்வியடைந்த வேட்பாளர்களை அரசியல் வேலை செய்ய அனுமதிக்கிறீர்கள். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தோற்ற பிறகு, நீங்கள் மீண்டும் அவர்களை அபிவிருத்தி பணிகளைக் கட்டுப்படுத்த அனுமதிக்கிறீர்கள் மற்றும் அப்பகுதியின் அபிவிருத்தியில் பங்கேற்பதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் ஒதுக்கி வைக்கிறீர்கள்.

இது நான் சுட்டிக்காட்ட விரும்பும் மற்றுமொரு பிரச்சினை.

ஒதுக்கீடுகள் மற்றும் அவற்றின் குறைவான செயலாக்கம்

நான் இதைச் சொன்ன பிறகு நாங்கள் மற்ற சில பிரச்சினைகளைக் கையாள விரும்புகிறோம்.

இப்போது, கல்முனையில் ஒரு உள்ளக விளையாட்டரங்கத்திற்கு 150 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே 150 மில்லியன் கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலும் ஒதுக்கப்பட்டது. ஒரு சதம் கூட செலவிடப்படவில்லை, இதைத்தான் கபீர் கூறினார். கடந்த ஆண்டு 150 மில்லியன் ஒதுக்கப்பட்டது, மீண்டும் 150 மில்லியன். எனவே, உண்மையில் கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட முழு பணத்திலும் வெறும் 30% மட்டுமே பௌதீக முன்னேற்றம், 20% கூட நிதி முன்னேற்றம் இல்லை. இதுதான் மதிப்பீடு கூறுகிறது.

எனவே, இந்த நிதிகள் அனைத்தும். நிச்சயமாக, நிந்தவூரில் அரை குறையாக முடிக்கப்பட்ட கேட்போர் கூடத்திற்காக 300 மில்லியன் ஒதுக்கியதற்காக ஜனாதிபதிக்கு நன்றி சொல்லி நாங்கள் அதை பாராட்டுகிறோம்.

அதற்காக நாங்கள் மேலும் 400 மில்லியனை செலவழித்தோம், மேலும் அரசாங்கம் மாறியதால் அதை முடிக்க முடியவில்லை.

எனவே, இந்த அரசாங்கம் அதை முடிக்க முன்வந்துள்ளது. நாங்கள் அதற்காக அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து நன்றி கூறுகிறோம். ஆனால் என்ன நடக்கும் என்றால், கல்முனையில் நடந்தது போலவே, நிந்தவூரிலும் 300 மில்லியன் ஒதுக்கப்பட்டும் மீண்டும் நடக்குமா என்று எங்களுக்குத் தெரியாது. எனவே, தயவுசெய்து குறைந்தபட்சம் செயல்படுத்தும் பகுதி சரியாக மேற்பார்வையிடப்பட்டு, வேலையை முடிக்கிறதா என்பதை உறுதிப்படுத்தவும், இல்லையெனில் இந்த ஒதுக்கப்பட்ட அனைத்து நிதிகளும் அர்த்தமற்றதாகிவிடும்.

### அதிகாரத்துவப் போக்குக்கு எதிரான கோரிக்கை

இதற்கிடையில், கிராமப்புற அபிவிருத்தி பணிகள் செயல்படுத்தப்படுவதில் சில வெளிப்படைத்தன்மை இருப்பதை உறுதிப்படுத்தவும். காலை சுகாதார அமைச்சர், நாம் அனைவரும் மாவட்ட மேம்பாட்டுத் திட்டங்களில் பங்கேற்க வேண்டும் என்றும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பங்கேற்று அரசாங்கத்திற்கு திட்டங்களைச் செய்வதில் பங்களித்து உதவ வேண்டும் என்றும் கூறினார்.

ஆனால், இதற்கிடையில், அவர்கள் உள்ளூராட்சி மன்றங்களை எந்தவொரு அபிவிருத்தி பணிகளையும் செய்வதிலிருந்து ஒதுக்கி வைக்கிறார்கள்.

இதற்கிடையில், கபீர் ஹாஷிம் பங்கேற்கவிருக்கும் ஜெர்மன் விவாதம் ஒன்று உள்ளது, அங்கு அதே பிரச்சினை விவாதிக்கப்படுகிறது, அங்கு ஆளுனர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளைத் தடுக்க பயன்படுத்தப்படுகிறார்கள்.

நாட்டில் ஒரு சரியான அபிவிருத்தி நடக்க வேண்டுமானால், மற்றும் ஒரு அதிகாரத்துவ போக்கு உருவாகாமல் இருக்க வேண்டுமானால், இவை அனைத்தும் மாற வேண்டும். அந்த கருத்துக்களுடன் நான் முடித்துக் கொள்கிறேன். என தனது உரையை நிறைவு செய்தார்.






நாச்சியாதீவு பர்வீன்

# லறீனா அப்துல் ஹக்கின் 'தஜ்ஜாலின் சொர்க்கம்'

எஸ். ஃபாயிஸா அலி

கடந்தவார தொடர்....

தன் வாழ்வின் அடுத்த கட்டம் குறித்துச் சுயமாக முடிவெடுக்கும் நிலைக்கு அவள் வருவதை சிலபோது பெண்களாலேயேகூட சட்டென ஏற்றுக்கொள்ள முடியாமல் போகும் அளவுக்கு இச்சமூகமும் கலாசாரமும் நம் மனநிலையைக் கட்டமைத்து வைத்திருக்கிறதோ என்ற சிந்தனையோடு அடுத்த கதைக்குள் நுழைகிறேன்.

ஏழாவது கதை, ”ஸெய்னம்பு நாச்சி”. நான் விரும்பி வாசிக்கும் லறீனாவின் முகநூல் பதிவுகளுக்குள் இடைக்கிடையே கெத்தாக எட்டிப் பார்த்து சமூகத்தின் குறைகளைப் பயமின்றி சுட்டிக் காட்ட முனைகின்ற ஓர்மம் நிறைந்த அதே ஸெய்னம்பு நாச்சியே தான்.

ஒன்பது வயதான ஓர் ஏழை சிறுமி வளர்வதற்குத் தனது வீட்டுச்சூழலைப் பொருத்தமற்றதாக காணும் ஒரு தாய் தனது உறவுமுறைப் பெண் வீட்டில் அவளை விட்டுச் செல்கிறாள். அந்த உறவுப் பெண் சிறுமி நஸ்லியாவின் சக்திக்கு மீறிய பல கடினமான வேலைகளைக் கொடுத்து அவளை கொடுமைப் படுத்துகிறாள். அந்தச் சிறுமியின் கஷ்டங்களை, மனவேதனைகளை உணர்ந்து அவளைத் தாயாரோடு வீடு செல்வதற்கு உதவி புரிகிறார், செய்னம்பு நாச்சி. அந்தச் சிறுமிக்காகத் தானும் வீட்டை விட்டு வெளியேறவும் துணிகிறார்.

தலைநகரில் மலையகச் சிறுமிகள் குறைந்த சம்பளத்தில் வேலைக்கு அமர்த்தப்படுவது பற்றி நாம் அடிக்கடி செய்திகளில் பார்க்கிறோம் கொதித்துப் போகிறோம். உண்மையில் இதுவும் ஒருவகை சிறுவர் துஷ்பிரயோகமே. நல்லவேளை, முளையிலேயே கருகிப் போகாமல் தன் கறாரான பேச்சுக்களால் அந்தப் பிஞ்சை மறுபடியும் துளிர்க்கச் செய்கிறார், செய்னம்பு நாச்சியார்.

கதைக்குள்ளே அவர் கலந்து கொள்ளும் பலவகைப்பட்ட உரையாடல்களுக்கு கதைசொல்லியின் புத்திக்கூர்மையும் முற்போக்குச் சிந்தனைகளும் பளிச்சிடும். மார்க்கத்தின் பெயரால் சமூகத்தில் நடக்கும் கேலிக் கூத்துக்கள், மூடநம்பிக்கைகள், அதற்கூடாக நசுக்கப்படும் பெண்களின் மன உணர்வுகள் என வெகு அழகாய்க் கதை நகர்த்தப்பட்டு இருக்கும்.

“கொஞ்சம் உட்டா இவனுவள் அங்கீக்கிற மியூஸியத்தையும் இஸ்லாத்துக்கு எடுக்கிறய் எண்டு ஷெல்லி, அந்தப் பொணத்துக்கெல்லாம் ஜுப்பாவும் அபாயாவும் உடுப்பாட்டினாலும் புதினப்படுறதுக்கில்லடா வாப்பா! இவனுகள் இஸ்லாம் இஸ்லாமுண்டு ஷெல்லி இஸ்லாத்த இந்த ஒலகத்துக்கே லாயக்கில்லாத மார்க்கம் ஆக்கிட்டு வாறானவள். ஏன்ட வாப்பாண்டே! எங்கட காலத்திலயிம் இஸ்லாம் இல்லாமையா போச்சி? - எப்ப இந்த குரூப் குரூப்பா தொடங்கி இஸ்லாத்த வித்துத் திண்டு தண்ணி குடிக்கத் தொடங்கினான்களோ, அப்ப புடிச்சது எங்கட சமூகத்துக்கு முஸீபத்து.” (ப.128 )

ஸெய்னம்பு நாச்சி என்ன சொல்லவருகிறார் என்பது புரிகிறது தானே?

அவர் சொல்வதாக இன்னொரு வரியும் வரும். ”பசியோ பட்டினியோ பெத்தபுள்ளவள் உம்மாக்கிட்ட ஈக்கிக்கிறது தான் நல்லம்” (ப.132) என்று. உண்மைக்கு உண்மையான கருத்து அது.

எட்டாவது கதைதான் தஜ்ஜாலின் சொர்க்கம். நூலின் பெயரும் அதுதானே! தஜ்ஜால் என்பது முஸ்லிம் பண்பாட்டு மரபின் அடியான ஒரு தொன்ம நம்பிக்கை. அதனை நிகழ்வெளிக் கதைக்குள் கொண்டு வந்து இணைத்துள்ள விதம் மிக அற்புதமாக அமைந்துள்ளது. பெச்சிம்மாக் கிழவி சொல்லும் கதையாக தஜ்ஜால் இக்கதைக்குள் மெதுவாக நுழைகிறான்,

“அவன் இப்பவும் ஒலகத்துல எங்கியோ ஒரு மூலைல ரகசியமான ஒரு குகைக்குள்ள ஈக்கிறான். அது நெலத்துக்கடியிலயா கடலுக்கு அடியிலயாண்டு தாறுக்குமே தெரியா. அவன அங்க பென்னாம் பெரிய்ய சங்கிலியால கட்டிவெச்சி ஈக்கிது. அவன் எந்த நாளும் ராவெல்லாம் அந்தக் குகைட சுவர நாக்கால நக்கி நக்கி வெளிசாக்கிட்டே வருவானாம். அப்ப” (ப.137) என்று பெச்சிம்மா நிறுத்தும் போது, அவரைக் குழுமியுள்ள சின்னஞ் சிறுகளோடு நாமும் கதைக்குள் ஆழ்ந்து விடுகின்றோம்.




இவ்வாறு, தஜ்ஜால் பற்றிய தொன்மக் கதையையும் இணைத்துக் கொண்டு முனீராவின் கதையை நம் கண்முன் விரிக்கின்றார் கதைசொல்லி. என்ன சொல்வது? சோகம்.. சோகம். முழுக்கதையும் அப்படி ஒரு சோகம். வீட்டில் தன்னோடு வாழும் துணைவியின் அறிவையும் திறன்களையும் அடக்கி நசுக்கிக் கொண்டே உலகம் தன்னை ஒரு முற்போக்குவாதியாகக் கருத வேண்டும் என்று போலிப் பெண் சுதந்திரம் பேசித் திரியும் இரட்டை வேடதாரிகளையும், மார்க்கத்தின் பெயரால் ஊரை ஏய்க்கும் நயவஞ்சகர்களுடைய கபட நாடகத்தையும் தோலுரித்துக் காட்டும் அதேநேரம், பெண் மக்களே ஆனாலும் அவர்கள் தற்சார்புடையோராய் வாழ்வதை ஊக்குவித்து உதவும் முனீராவின் பெரியப்பா போன்ற பரந்த மனதுடைய ஆண்களும் சமூகத்தில் வாழ்கிறார்கள் என்ற நம்பிக்கையை ஊட்டி கதாபாத்திர வார்ப்பில் சமநிலை பேணுகிறார் கதைசொல்லி.

இக்கதையில் வரும் முனீரா போன்ற பெண்களின் நிலையைக் கண்டு தானோ அன்றைய பாரதியும், ‘நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ?’ எனப் பாடி இருப்பானோ என்ற எண்ணம் மனதில் தோன்றி மறைந்தது. மறுபடியும் கனவுகள் சிதைக்கப்பட்ட இன்னொரு பெண்ணின் மனக்குமுறலாக இக்கதை இருந்த போதிலும், பெச்சிம்மாவின் கதையினூடே சொல்லப்பட்ட தஜ்ஜால், ஒரு கதாபாத்திரமாகக் கதைக்குள் உள்நுழைந்து எல்லோரையும் கிடுகலங்க வைப்பது ஒரு சுவாரஷ்யமான திருப்புமுனையாக அமைகிறது.

இக்கதையில், தஜ்ஜால் என்பதும் அவன் காட்டும் சொர்க்கம் என்பதும் கதைக் கருவுக்கு வலுசேர்க்கும் இரு குறியீடுகளாக மாறிவிடுகின்றன. அவற்றைக் கதைக்குள் எடுத்தாண்டு மிகச் சுவாரஷ்யமாகக் கதையை வளர்த்துச் செல்லும் அவரது புனைவு உத்தி கூர்மை பெற்ற ஓர் அருமையான கதையாக இத்தலைப்புக் கதையினை அடையாளப்படுத்தலாம்.

இக்கதையில் முனீராவின் குடும்ப வாழ்வில் நடக்கக்கூடாத அசம்பாவிதங்கள் நடந்து முடிந்த பின்புதான், தஜ்ஜாலின் பிரவேசம் கதையில் இடம்பெறுகிறது.

அடுத்தவாரம் தொடரும்...

# பங்களாதேஷ் ஊடகத்துறை பேராசிரியர் கபில் கானுடன் மீடியா போரம் சந்திப்பு



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் டஃபோடில் சர்வதேச பல்கலைக்கழகத்தின் (Daffodil International University) ஊடகம் மற்றும் தொடர்பாடல் துறை இணைப் பேராசிரியர் அப்துல் கபில் கான்

அவர்களுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் பிரதிநிதிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை (13.11.2025) கொழும்பில் இடம்பெற்றது.

போரத்தின் தலைவர் எம்.பி.எம். பைறூஸ் தலைமையில் இலங்கை பத்திரிகை ஸ்தாபன கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் ஊடகத்துறை மேம்பாடு தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

பங்களாதேஷிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கும் முஸ்லிம் மீடியா போரத்திற்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்துவதுடன் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிநெறிகள் மற்றும் வாய்ப்புகளை பகிர்ந்துகொள்வது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

குறிப்பாக இலங்கையில் ஊடக பட்டப்படிப்பை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு பங்களாதேஷ் பல்கலைக்கழகங்களில் பட்டமேற்படிப்பை மேற்கொள்வதற்கான புலமைப்பரிசில்களை பெற்றுக்கொடுத்தல், டஃபோடில் சர்வதேச பல்கலைக்கழகத்தின் மூலம் இலங்கை ஊடகவியலாளர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல், ஊடக மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்வதில் இணைந்து பணியாற்றுதல், இலங்கை - பங்களாதேஷ் ஊடகவியலாளர் களுக்கிடையிலான உறவை வலுப்படுத்தி எல்லை தாண்டிய அறிக்கையிடல்களை (Cross Border Reporting) முன்னெடுத்தல் போன்ற விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன.

இச்சந்திப்பில் முஸ்லிம் மீடியா போரத்தின் செயற்குழு உறுப்பினர்களும் அமைப்பின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் நடைபெற்ற கனடா - யாழ்ப்பாண முஸ்லிம்களின் ஒன்றுகூடலின் போது மர்ஹூம் அப்துல் கபூர் ஞாபகார்த்தமாக, யாழ் ஒஸ்மானியா கல்லூரியில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்காக மாணவர்களிடத்தில் அயராது பாடுபடும் ஆசிரியைகளான றிஸானா பர்வீன், முஸ்பிகா ஆகியோரை கௌரவித்து கலாபூஷணம் பரீட் இக்பால் பரிசில் வழங்கும் போது எடுத்த படங்கள்.

தேசிய பத்திரிகையாக (மின்னிதழ்) வாசகர்கள் மத்தியில் வலம்வருகின்ற **“உதயம்”** பத்திரிகைக்கு தங்களின் பேராதரவை எதிர்பார்ப்பதுடன் கீழுள்ள QR ஐ Scan செய்வதனூடாக எமது வட்ஸ்அப் குழுமத்தில் இணைந்து ஒவ்வொரு வெளியீட்டின் பிரதிகளையும் இலவசமாக பார்வையிடலாம்...

அத்துடன், உங்களது பிரதேசங்களில் இடம்பெறும் செய்திகளையும் எமது மின்னஞ்சல் ஊடாக எமக்கு அனுப்பி வைக்க முடியும்.

editor.uthayam@gmail.com

## மனநலமும் ஆலோசனையும் 92

# "போதையற்ற சமூகம்" நாம் தொடங்குவோம்!

ஒரு சமூகத்தின் வலிமை அதன் இளைஞர்களில் தான் உள்ளது.

அந்த இளைஞர்கள் போதைப் பொருள்களுக்கு அடிமையாவதால் தங்கள் கனவுகளையும், குடும்பங்களையும், எதிர்காலத்தையும் இழக்க நேரிடுகிறார்கள். இதுபற்றி பல மோசமான சம்பவங்களை நாம் கேள்விப்படுகிறோம்.

ஒரு நொடிக் கேளிக்கையால் ஆயுள் முழுவதையும் இருளாக்கிக் கொள்கிறார்கள்.

எனவே போதையற்ற ஒரு சமூகத்தை உருவாக்குவதன் தேவை அவ்வளவு அவசியமாகும்.

போதையற்ற சமூகம்..

போதையற்ற சமூகம் என்பது போதைப்பொருள், நச்சு மாத்திரைகளில் யாரும் அடிமையாகாத ஆரோக்கியமான நிலையிலிருக்கும் ஒரு சமூகத்தை குறிக்கும்.

"போதையற்ற ஆரோக்கியமான சமூகம்" என்பதற்கு,

மனிதனை அடிமையாக்கும் போதை பழக்கங்களிலிருந்து விலகி தெளிவான சிந்தனையும், ஆரோக்கியமான உடலும், அழகான உறவும், சாந்தியான வாழ்வையும் தரக்கூடிய சமூக வாழ்க்கையை அனுபவித்தல் எனவும் அர்த்தம் கொள்ளலாம்.

போதையற்ற சமூகத்தை எப்படி உருவாக்கலாம்?

இதற்கு ஒரே ஒரு வழி என்று ஒன்று இல்லை. பல திசைகளில், பல வடிவங்களில், பல நுட்பமான முறைகளில் செயல்பட வேண்டிய ஒரு செயல்திட்டமாகும்.

சில முக்கியமான வழிமுறைகளை மட்டும் இங்கு சுருக்கமாக பார்ப்போம்.

கல்வி வழியாக....

பாடசாலை, கல்லூரி மட்டத்திலே போதை எதிர்ப்பு கல்விப் பாடங்கள் நடத்துதல்.

சிறு வயதிலிருந்தே விழிப்புணர்வு கல்வி கொடுத்தல்.

மாணவர்களுக்கு ஆரோக்கியம், உடற்பயிற்சி, மனநலம் பற்றிய கல்வியை வழங்குதல்.

குடும்ப வழியாக..

பெற்றோர் முன்மாதிரியாக இருத்தல். பிள்ளைகளுடன் நேரம் செலவிடுதல், அவர்களை கண்காணித்தல். வீட்டில் "போதையைப் பற்றி பேசக் கூடாது" என்ற தடைகள் இல்லாமல், பிள்ளைகளுடன் திறந்த உரையாடல்களில் ஈடுபடல்.

சமூக வழியாக....

பள்ளிவாயல்கள், சமூக அமைப்புகள், மத நிறுவனங்கள், கலாச்சார குழுக்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல். ஆன்மீக வழிகாட்டல்கள் மற்றும் பயிற்சிகள் மூலம் வாழ்வின் பொருளை உணர்த்துதல்.

ஊடகங்கள் மூலமாக... (பத்திரிகை, சமூக ஊடகங்கள்) மூலம் நேர்மறையான செய்திகளை வழங்குதல்.

இளைஞர் வழியாக..

இளைஞர்களுக்கு வாழ்க்கைத் திறன் பயிற்சிகளை வழங்குதல்.

"போதையற்ற இளைஞர் வலுவான நாடு" போன்ற கோஷங்களுடன் பிரச்சாரம் செய்யலாம்.

கலாச்சார வழியாக....

கவிதை, ஓவியம், குறும்படம், பாடல், தெரு நாடகங்கள் வழியாக செய்தி பரப்புதல்.

விளையாட்டு வழியாக..

விளையாட்டு மற்றும் ஆரோக்கிய நடவடிக்கைகளை

அறிமுகப்படுத்தலாம். கிராமிய அளவிலான விளையாட்டு போட்டிகள், "சுரெ கழச னுசரப-குசநந டுகைந" போன்றவாறான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யலாம்.

பாடசாலை மற்றும் சமூக மையங்கள் சேர்ந்து சொற்பொழிவு, சுவரொட்டிகள் மூலம் விழிப்புணர்வுகள் செய்யலாம். காலத்துக்கும் வயதுக்கும் பொருத்தமான பொழுதுபோக்குகளில் ஈடுபட வாய்ப்புகளை உருவாக்கலாம்.

இந்த விடயங்கள் சாத்தியமா?

இதுபோன்றோம் விடயங்களை செய்கிறோம் தானே? எந்த மாற்றமும் நடக்கவில்லையே என்று நாம் நினைக்கலாம்... ஆம்.. இந்தவிடயத்தில் மாற்றம் சட்டென வருவதில்லை.

மாற்றம் முழுமையாக இல்லாவிட்டாலும், மாற்றத்திற்கான சாத்தியம் பெருமளவில் இருக்கிறது.

ஐஸ்லாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகள் இளைஞர்களிடையே போதைப் பழக்கத்தை 70-80% வரை குறைத்துள்ளன.

அதனால் "முடியாது" என்று நினைப்பதைவிட, "தொடங்க வேண்டும்".

தொடங்கி நடை முறைப்படுத்தும் நிறுவனங்கள் எம் நாட்டிலும் இருக்கின்றன.

தொடங்கிவிட்டு அந்த இடத்தில் இருந்துவிடாமல் தொடரான முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

சமூகம் ஏற்கும் விதமாக காலத்துக்கு காலம் புதிய சிந்தனை களுடனான செயல்திட்டங்கள் முன்வைக்கப் படுவது நல்லது.

விழிப்புணர்வு மட்டும் போதுமா?

இல்லை, விழிப்புணர்வு தொடக்கம் மட்டுமே.

அதனுடன் சேரவேண்டிய விடயங்கள் பலவற்றை நாம் மேலே கவனித்தோம்.

- போதை பொருட்கள் எளிதில் கிடைக்காதபடி சூழலை பாதுகாக்க கட்டுப்பாட்டு முறைகளை உருவாக்குதல்.
- விளையாட்டு, கலை, ஆன்மீகம், தன்னார்வச் சேவை போன்ற நேர்மறை ஈடுபாடுகளை அதிகப்படுத்தல்.
- அடிமையிலிருந்து மீள விரும்புவோருக்கு உதவி மையங்களை அறிமுகப்படுத்தி மீட்டெடுக்க ஏற்பாடு செய்தல்.
- சமூக நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து இதை ஒரு நீண்டகால திட்டமாக எடுத்துச்செல்ல வழிவகுத்தல்.

என்பன மிக முக்கியமான விடயங்களாகும்.

போதையற்ற சமூகத்தை உருவாக்கும் சக்தி ஒவ்வொருவரின் உள்ளங்களிலும் இருந்து வெளிப்பட வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இதன் அவசியம் உணர்த்தப்பட வேண்டும்.

கல்வியை, ஒழுக்கத்தை பிரதான கருவிகளாக பயன்படுத்தி போதையற்ற ஆரோக்கியமான சமூகம்" உருவாக நாம் ஒவ்வொருவரும் கைகொடுப்போம்.

***



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---

# பல விதமான மனிதர்களுக்கு திறக்கப்பட்ட நிவ்யோர்க் வாயில்

- இம்தியாஸ் பாக்கீர் மாகார் -

பாரம்பரியமாக மூலதனத்தைக் கொண்டோர் அமெரிக்கச் சமூகத்தில் அரசியல் கொள்கைகளைச் செயற்படுத்துகின்றனர். அவர்களின் கொள்கைகளுக்கு எதிராகச் சவால் விடுவது அரசியல் தற்கொலை செய்வதை ஒத்தது என்கின்ற ஒரு கருத்து அமெரிக்கச் சமூகத்தில் நிலவுகின்றது. அவர்களின் கொள்கைகளுக்கு அமைய தாராளவாதிகளும் கம்யூனிஸ்டுகளும் உலகம் பூராக குற்றவாளிகளாக சித்தரிக்கப்படுகிறார்கள். முஸ்லிம்கள் பயங்கரவாதிகளாக சித்திரிக்கப்படுகின்றார்கள். அத்தகைய ஒரு சூழலில் "நான் ஜனநாயகத் தாராளவாதி" என்று தனது தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுத்த சொஹ்றான் மம்தானியின் துணிச்சல் வியப்பூட்டுவதாக இருக்கின்றது.

மம்தானியின் தாராளவாத ஜனநாயகப் பார்வை இவ்வாறு வெளியிடப்பட்ட போது, 1963ஆம் ஆண்டு இரண்டு நாட்களாக களுத்துறை மாவட்டத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில், "ஜனநாயக சமூகவாதம்" என்பது கட்சியின் கொள்கையாகத் தீர்மானிக்கப்பட்ட சம்பவம் எனது நினைவுக்கு வந்தது. தலைவர்களின் வெற்றுப் பேச்சுகளைக் கேட்கும் ஒரு மகாநாடாக மாத்திரம் அது இருக்கவில்லை. இரண்டு நாட்களாக நடைபெற்ற அந்த மகாநாட்டில் பிரதிநிதிகளின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு, அவவை கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன. இவ்வாறு அந்த மகாநாட்டில் பங்கேற்பு ஜனநாயகம் வெளிப்பட்டது.

சூடான வாத விவாதங்கள் நடந்த பின்னர் "ஜனநாயக சமூகவாதம்" கட்சியின் தூர நோக்கு என்று அறிவிக்கப்பட்டது. அந்தப் பாதையில் பயணிப்பதற்கு டட்லி சேனாநாயக்கரின் தனது அரசியல் வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணித்தார்.

கம்யூனிசம், தாராளவாதம் போன்றவை தடை செய்யப்பட்ட சொற்களாகக் கருதப்படுகின்ற சமூகப்



பின்னணியில் நிவ்யோர்க் நகர மக்கள் ஜனநாயக தாராளவாத சிந்தனை கொண்ட ஒருவரை தமது நகரசபையின் தவிசாளராக அமோக வெற்றியுடன் தெரிவு செய்துள்ளனர்.

இதனால் மொத்த அமெரிக்க அரசியலும் அதிர்ச்சி அடைந்துள்ளது.

சமூக நீதி, பொருளாதார நீதி என்பவற்றைப் பற்றி வலியுறுத்தி, சமூகத்தில் நிலவும் சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை தனது தேர்தல் பிரசாரத்தின் முதன்மை அம்சங்களாக மம்தானி முன்வைத்தார்.

தனது சமூகத்தின் சம்பிரதாயமான ஆட்சி வர்க்கத்தினரை பொறுப்புச் சாட்டி அவர்களுக்கு எதிராக அவர் முன்வைத்த விமர்சனங்கள் அவர்களுக்கு எதிரான ஒரு குற்றப் பத்திரமாக இருந்தது. மம்தானியின் கூட்டணியில் நடுநிலையானோர், சமூக ஜனநாயகவாதிகள், சமுதாயத்தின் அனைத்து பிரிவுகளையும் பிரதிநிதித்துவம் செய்தோர் இருந்தார்கள். வாக்காளர்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் புரிந்து கொள்ளுவது அவர்களுடைய பொதுவான உடன்பாடாக இருந்தது.

அமெரிக்கா அரசியல்வாதிகளை ஒரு சிலர் கைதிகளாக கையகப்படுத்துகின்றனர். அவர்களது ஊழல் அரசியலின் அடையாளமாக டிரம்பைச் சித்தரித்து அவர் முன்னெடுத்த தேர்தல் பிரசாரம் சவாலான ஒன்றாக இருக்கவில்லை.

மம்தானியின் தேர்தல் பிரச்சார ஆலோசகராக 28 வயதான மொரிஸ் கெட்ஸ் அழைக்கப்பட்ட போது "மம்தானி இந்தத் தேர்தலை எப்படி வெல்வார்?" என்கின்ற சிந்தனையே தனக்கு முதலாவதாக வந்ததாக ஒரு நேர்காணலில் மொரிஸ் கெட்ஸ் குறிப்பிட்டார்.

அவ்வாறு அவர் சிந்திக்கப் பல காரணங்கள் இருந்தன. ஜனநாயகக் கட்சியின் உள்ளரங்கப் பிளவுகள், இஸ்லாமோபியா தீவிரமாக சித்தரிக்கப்பட்ட சூழல் என்பவற்றின் பின்னணியில் தென் ஆசிய, ஆபிரிக்கா முஸ்லிம் வம்சாவளியைச் சேர்ந்த ஒருவரால் இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவது சாத்தியமா என்பதே அதற்கான காரணங்களாகும்.

என்றாலும் மம்தானியின் தன்னம்பிக்கை, தனது கண்ணோட்டத்தின் மீதான நம்பிக்கை, அவரின் ஈர்ப்பு தன்மை, மனிதாபிமானம், வாக்காளர்களுடன் தொடர்பு கொள்ளும் திறன் அனைத்தும் அவரது பிரச்சாரத்தில் தெளிவாகத் தெரிந்தன.

பாரம்பரியமாக ஜனநாயகக் கட்சி குறைவாக வாக்குகள் பெறும் பகுதிகளிலும் முனைந்து சென்று, அங்குள்ள மக்களுடன் நேரடியாக கலந்துரையாடிய அவர், "இந்த மாற்றத்திற்காக உங்களின் ஆதரவு எனக்குத் தேவை" என்று நேரடியாகக் கேட்டார். பொதுவாக அபேட்சகர்கள் இவ்வாறு செய்வதில்லை.

இந்த அணுகுமுறை சிறப்பாகப் பலனளித்தது. ஜனாதிபதி தேர்தலில் டிரம்ப் வென்ற அதே பகுதிகளில், அவர் பெற்ற வாக்குகளை விட அதிக வாக்குகள் மம்தானிக்கு கிடைத்தன. நியூயோர்க்கில் அதிகமாக யூதர்கள் வசிக்கும் பிரதேசங்களில் 30 வீதமும் ஏனைய பிரதேசங்களில் (கறுப்பு, கபில, ஆபிரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்காப் பூர்வீகங்களைக் கொண்ட மக்கள்) 50 வீதத்துக்கு அதிகமாகவும் கிடைத்தாக ஊடகங்கள் தெரிவித்தன.

அவரது தேர்தல் பிரச்சாரத்தில் சுமார் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் இணைந்தனர். இது வாக்காளர்களின் செயற்பாட்டு பங்கேற்பு எவ்வளவு அதிகமானது என காட்டிகிறது.

இந்த தேர்தலில் மம்தானி முன்வைத்த கருத்துக்கள், பொருளாதாரத்தின் வலிமையால் ஆளப்படும் பாரம்பரிய வலதுசாரிப் பிரிவுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக அமைந்தது. அதனால் மம்தானியை தோற்கடிக்கப் பெரும் தொகை பணம் அவர்களால் செலவழிக்கப்பட்டது. இவர் கம்யூனிஸ்ட்வாதி, மத்திய கிழக்கு பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புடையவர், மேயர் பதவிக்குத் தகுதி அற்றவர் போன்ற குற்றச்சாட்டுகள் அவரது மீது அவர்களால் முன்வைக்கப்பட்டன.



இத்தனை சவால்களையும் கடந்து பெற்ற இந்த வெற்றி உண்மையான மக்கள் வெற்றி. பணக்கார வர்க்கத்தின் ஆதரவு இல்லாது வெற்றி பெற முடியாது என்ற பாரம்பரிய அரசியல் நம்பிக்கையை நியூயோர்க் மக்கள் முறையடித்துள்ளனர்.

அமெரிக்கச் சமூகத்தில் சமூகப் பொருளாதார நீதி முக்கியமாக எடுத்துரைக்கப்பட வேண்டும் என்பதை இந்தத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. பல்வேறு இனங்களும் கலாசாரங்களும் ஒன்றாக வாழத் தயாராக இருக்கும் புதிய தலைமுறையின் தாக்கமும் தெளிவாகப் புலப்படுகிறது. உலக நீதியை மதிக்கும் அமெரிக்க சமுதாயம் உருவாகி வருவதை இது காட்டுகிறது. இஸ்லாமோபோபியா மற்றும் குடியேற்ற எதிர்ப்பு தூண்டுதலால் டிரம்ப் உருவாக்கிய பயத்தை நிராகரித்ததைக் காட்டுகின்ற வெற்றியாக இது இருக்கின்றது.

அமெரிக்கா அரசியலின் பாரம்பரியப் பயணத்துக்கு ஒரு புரட்சிகர மாற்றத்தை உருவாக்கிய ஓர் அரசியல் தருணமாக இதனை நான் காண்கிறேன்.

மொழிபெயர்ப்பு: மபாஸ் சனூன்

# அமானா வங்கியின் வங்கிச் சேவைகள் கல்பிட்டிக்கு விஸ்தரிப்பு


அமானா வங்கி தனது புதிய சுய வங்கிச் சேவை நிலையத்தை (SBC) கல்பிட்டியில் திறந்துள்ளது. நாடு முழுவதிலும் இலகுவாக அணுகக்கூடிய மற்றும் சௌகரியமான வங்கிச் சேவைகளை பெற்றுக் கொடுக்கும் அர்ப்பணிப்பின் மற்றுமொரு மைல்கல்லாக இந்த சேவை விஸ்தரிப்பு அமைந்துள்ளது. இல. 202ஃடீ, பிரதான வீதி, கல்பிட்டி எனும் முகவரியில் அமைந்துள்ள இந்த சேவை நிலையம், அமானா வங்கியின் 67 ஆவது வாடிக்கையாளர் அமைவிடப்பகுதியாக அமைந்துள்ளது. இதில் 34 சுய வங்கிச் சேவை நிலையங்கள் மற்றும் 33 சகல வசதிகளையும் கொண்ட கிளைகள் போன்றன அடங்கியுள்ளன.

வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால், வைப்புகள் பரவலாக்கம் மற்றும் டிஜிட்டல் புத்தாக்க உதவி உப தலைவர் அர்ஷாத் ஜமால்தீன், சிறிய நடுத்தரளவு தொழில்முனைவோர் வங்கியியல் உதவி உப தலைவர் அர்ஷாத் அத்னான், வியாபார தலைமை அதிகாரி (மேல் பிராந்தியம்) - நிஷாத் நவாஸ், பிராந்திய கல்வி அலுவலக பணிப்பாளர் ஏ.எம்.அஜ்வாத், பிரதேச வியாபார பிரதிநிதிகள், உள்ளூராட்சி அதிகார தரப்பினர் மற்றும் பிரதேசவாசிகள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கல்பிட்டி சுய வங்கிச் சேவை நிலையத்தினூடாக பண மீளப் பெறல், பண வைப்பு மற்றும் காசோலை வைப்பு போன்ற சகல வசதிகளும் எந்நேரமும் வழங்கப்படும்.

இந்த விரிவாக்கம் தொடர்பில் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் கருத்துத் தெரிவிக்கையில், "சுய வங்கிச் சேவை நிலையத்தை நிறுவியுள்ளதனூடாக கல்பிட்டிக்கு எமது வலையமைப்பை நாம் விஸ்தரித்துள்ளோம். கல்பிட்டியவில் எமது பிரசன்னம் என்பது, மக்களுக்கு நட்பான வங்கிச் சேவை மாதிரியை நாட்டின் பின்தங்கிய பகுதிகளுக்கு விஸ்தரிக்கும் எமது அர்ப்பணிப்பின் ஒரு அங்கமாக அமைந்துள்ளது. இந்த சுய வங்கிச் சேவை நிலையம், கல்பிட்டி பகுதியைச் சேர்ந்த கடற்றொழில் மற்றும் இதர தொழிற்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பயனளிப்பதாக அமைந்திருக்கும். வங்கிச் சேவைகளை சமூகத்தின் பலருக்கும் இலகுவாக அணுகும் வசதியை வழங்கியுள்ளதுடன், தமது நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை சௌகரியமாகவும் சுலபமாகாவும் முன்னெடுக்கும் வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது." என்றார்.

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் ஐளனுடீ குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. ஐளனுடீ குரூப் 'AAA' தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக ஏசியன் பாங்கர் அமைப்பினால் தரப்படுத்தப்பட்டிருந்தது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான ழுசியயஊலயசந நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.

---

மங்கையொளி

பயாஸா பாஸில்



# பேர்பெஃக்டான மனைவிமார்கள் யாரும் இல்லை

பேர்பெஃக்டான மனைவிமார்கள் என்று யாரும் இல்லை, எங்கும் இல்லை.

பேர்பெஃக்டான கணவன்மார்கள் என்று யாரும் இல்லை, எங்கும் இல்லை.

குடும்பங்கள் என்ற தொடர்வண்டிகள் தொடர்கிறனவென்றால் அதற்குக் காரணம் பேர்பெஃக்டான குடும்ப வாழ்க்கைகள் அமைந்துவிட்டன என்றாகாது.

மாறாக, குடும்ப வண்டிகளை ஓட்டிச் செல்லும் ஓட்டுனர்கள் முடிந்தவரை பெர்பெஃக்டான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற வேற்கையாகும், தொடர் பயணம் தொடர வேண்டும் என்ற அவாவாகும்.

முற்காலங்களில் இருந்த அதே மனிதர்கள் தான் இக்காலத்திலும் இருக்கிறார்கள். ஆனால் ஏன் அக்கலாங்களில் வெறும் பத்து இருபது வீதமாக இருந்த குடும்பபவியல் பிரச்சினைகளும் விவாகரத்துக்களும் இக்காலங்களில் ஐம்பத்து அறுபது வீதமாக எகிரிவிட்டன!!!

எக்காலங் களிலும் எந்த மனிதனிடமும் ஏதாவது ஓம்பப்படாத ஒரு குணம், அல்லது வெறுக்கத்தக்க ஒரு நடத்தை இருக்கத்தான் செய்யும்.

நாம் என்றும் மானிடர்கள். இங்கே வானத்திலிருந்து வந்த தேவர்கள் என்று யாருமில்லை. இங்கே வானத்திலிருந்து வந்த தேவிகள் என்றும் யாரும் இல்லை.

கணவன்மார்களின் குணங்கள் நடத்தைகளை எல்லாம் சரி காணவும் முடியாது, மனைவிமார்களின் குணங்கள் நடத்தைகளை எல்லாம் சரி காணவும் முடியாது.

ஆனால் முற்காலங்களில் வாழ்ந்தவர்களிடம் வாழ வேண்டும் என்ற வேற்கை இருந்தது. தொடர வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. விட்டுக்கொடுப்பும் மன்னிப்பும் தாராளமாக இருந்தது.

நம்பாதீர்கள்...!

தொலைக்காட்சி தொடர்களிலும் திரைப்படங்களிலும் காதல் நாவல்களிலும் நீங்கள் பார்க்கும் மற்றும் வாசிக்கும் பெர்பெஃ க்டான காதல் கதைகளையும் உணர்வுபூர்வமான குடும்ப வாழ்வையும் நம்பாதீர்கள். கற்பனை உலகம் வேறு நிஜ உலகம் வேறு என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஒரு மனைவி தன் மகனுக்கு எப்படியான ஒரு மனைவி அமைய வேண்டும் என்று ஆசைப்படுகிறாளோ அது போன்ற ஒரு மனைவியாக தனது கணவனுடன் அவ்வா நடந்துகொள்ளாமல் இருப்பது வெட்கக்கேடான ஒரு விஷ யமாகும்

ஒரு கணவன் தன் மகளுக்கு எப்படியான ஒரு கணவன் அமைய வேண்டும் என்று ஆசைப்படுகிறானோ அது போன்ற ஒரு கணவனாக அவன் தனது மனைவியுடன் நடந்துள்ளாமல் இருப்பது வெட்கக்கேடான ஒரு விஷயமாகும்.

மறுபுறம், வெற்றிகரமான இல்லறம் என்பது

இரு தரப்பும் பரஸ்பரம் பொறுத்தல், சகித்தல், புரிதல், மதித்தல் கவனித்தல் மற்றும் விட்டுக்கொடுத்தல் போன்ற உயர் பண்பாடுகளில் மாத்திரமே தங்கியுள்ளது என்பதை மறந்துவிடாதீர்கள்.

**– தமிழாக்கம்: இம்ரான் பாரூக் –**

# உதவி ஆசிரியர் நியமனத்தை விரைவுபடுத்தக் கோரி காங்கிரஸ் ஒன்றியம் கையெழுத்து வேட்டை

(எம்.ஏ. அமீனுல்லா )

இலங்கையின் மலையகப் பெருந்தோட்டப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான உதவி ஆசிரியர் நியமனத்தை விரைவுபடுத்தக் கோரி, காங்கிரஸ் கல்வியியல் ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒன்றியத்தின் தலைவர் கணபதி கனகராஜ் வெளியிட்ட தகவலின்படி, கல்வி அமைச்சுக்கு அனுப்புவதற்காக மலையகம் எங்கும் கையெழுத்து சேகரிப்பு நடத்தப்படவுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு, இரண்டாயிரத்து அறுநூற்று ஐம்பது (2650) உதவி ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. அதன்படி, இதற்கான போட்டிப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு சுமார் பதினான்காயிரம் (14,000) பேர் வரை விண்ணப்பித்திருந்தனர். ஆனால், சிலர் நீதிமன்றத்தை நாடியதால், இந்தப் பரீட்சை நடத்துவதற்கு மேல்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

இந்தச் சட்டச் சிக்கலை விரைவாகத் தீர்ப்பதில் கல்வி அமைச்சு கவனம் செலுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டும் கனகராஜ், இது தொடர்பாக தாம் ஏற்கனவே பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

எனவே, வர்த்தமானியில் உள்ள சட்டச் சிக்கல்களை நீதிமன்றத்தின் ஊடாகச் சரிசெய்து, உதவி ஆசிரியர் நியமனம் வழங்கும் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையிலேயே இந்தக் கையெழுத்து சேகரிப்பு நடைபெறவுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதி தலைவரும், காங்கிரஸ் கல்வியியல் ஒன்றியத் தலைவருமான கணபதி கனகராஜ் மேலும் தெரிவித்தார்.



# வத்தளை இப்னு மசூத் அரபுக் கல்லூரிக்கு சஜித் பிரேமதாச வருகை





வத்தளை பிரதேசத்தில் ஐக்கிய மக்கள் சக்திக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளும் முகமாக நடைபெற்ற மக்கள் சந்திப்பிற்கு வருகை தந்த வேளை, வத்தளை, ஹுணுபிட்டிய, இலக்கம் 789, காந்தி மாவத்தையில் அமைந்துள்ள இப்னு மசூத் அரபுக் கல்லூரிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விஜயம் செய்தார். இங்கு, இக்கல்லூரியின் பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகள் என்பவற்றை அடையாளம் காண நடவடிக்கை எடுத்தார்.





கேகாலை மாவட்டத்தின் மாவனல்லை கிளையின் இளம் மகளிர்(லு-றுஆயு) அமைப்பின் ஒன்று கூடலும்,முதியோர் சந்திப்பும் எம்.எப்.எப். ரிஸ்வானா அவர்களின் இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது. அதன் தலைவி ஆயிஷா அஸீஸ் மஃஷரூப் தலைமையில் நடைபெற்ற இவ் நிகழ்வில் அதிதிகளாக வைத்தியர் ஏ.ஜீ. எப்.நஜீயா,மௌலவியா நமீரா ஆசிரியை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்

(படம்: பாரா தாஹீர்)

# அக்கரைப்பற்று பாயிஸா மகா வித்தியாலய மாணவிகள் கஸீதா - இடை நிலைப் பிரிவு போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை

( ஐ. ஏ. காதிர் கான் )

தேசிய ரீதியில் முஸ்லிம் பாடசாலைகளுக்கு இடையிலான "முஸ்லிம் கலாசார, பாரம்பரிய போட்டி - 2025" நிகழ்வுகளின் ஓர் பிரிவாக, கஸீதா - இடை நிலைப் பிரிவு பெண்கள் குழுவினருக்கு இடையே, கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமையன்று இடம்பெற்ற போட்டி நிகழ்ச்சியில், அக்கரைப்பற்று பாயிஸா மகா வித்தியாலய மாணவிகள் குழுவினர் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இப்போட்டியில் திறமைகளை வெளிப்படுத்தி, பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ள நிதா ஸீனத், மிஹ்னாஸ், ஸ/ப்றா இஸ்ஸத், லம்யா, ஸதீம், இஸ்ஸத் லீனா, அறீபா ஆகிய மாணவிகளை பாயிஸா மகா வித்தியாலயம் சார்பில், அதிபர் மௌலவி எம்.கே. அஹமட் ஸியாத் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மடவளையைச் சேர்ந்த முஹம்மத் ரிஸ்னி காதி நீதவானாக நியமனம்

(எம்.ஏ.அமீனுல்லா)

உடதும்பர, மெததும்பர, பாத்ததும்பர நீதி நிருவாகப் பிரதேசங்களுக்கான புதிய காதி நீதவானாக அப்துல் சத்தார் மொஹமட் ரிஸ்னி நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் கடந்த( 06) வியாழக் கிழமை அன்று கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி சமன் பி. காரியவசம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

மடவளை மதீனா தேசிய கல்லூரியின் பழைய மாணவரான ஏ.எஸ்.எம் ரிஸ்னி, விஞ்ஞான கணித பட்டதாரியும் ஆங்கில பயிலுனர் ஆசிரியரும் ஆவார்.

இவர் குருஂபரகஹதெனிய தேசிய பாடசாலையில் உயர்தர இணைந்த கணித ஆசிரியராகவும், மடவளை மதினா தேசிய பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக கடமை புரிந்துள்ள இவர், பகுதி தலைவர் மற்றும் பிரதி அதிபராகவும் கடமை புரிந்து, அண்மையில் ஓய்வு நிலையை அடைந்துள்ளார்.

மடவளை சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தின் உப தலைவராகவும் தற்பொழுது பணியாற்றி வருகிறார். இவர், மடவளையைச் சேர்ந்த அப்துல் சத்தார் மற்றும் சஹ்தூனா உம்மா ஆகியோரின் அன்பு மகனாவார்.



# பெருகமலை ஸாக்கிரீன் குர்ஆன் மதரஸா மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு







( பீ.எம் முக்தார்)

பேருவளை சீனங் கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத் சீனங் கோட்டை பகுதி மத்ரஸாக்களுக்கிடையே 46 வருடமாக நடாத்திய மீலாத் சன்மார்க்க அறிவுப் போட்டியில் 26 வருடமாகவும் முதலிடம் பெற்று சாதனை நிலைநாட்டிய பெருகமலை ஸாக்கிரீன் குர்ஆன் மத்ரஸா மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மேற்படி பள்ளிவாசலில் நடை பெற்றது.

அதிபர் மௌலவி எஸ் எச் எம் இம்ரான் ஹூமைதி, உப அதிபர் மௌலவி யூஸுப் அலவி ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் நிறைவேற்று குழு உறுப்பினரும்,சீனங் கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளருமான கலிபதுஷ் ஷாதுலி அல்ஹாஜ் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

குர்ஆன் மத்ரஸாவின் பணிப்பாளர் மௌலவி பஹ்ருத்தீன் மிஸ்பாஹி, ஸாக்கிரீன் ஜூம்மா மஸ்ஜித் உப குழு நிர்வாகிகள்,சீனங் கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத் தலைவர் பஸீஹூர்ரஹ்மான் உட்பட உறுப்பினர்கள், மத்ரஸா முஅல்லிம்கள்,பெற்றோர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தாக்கிரீன் குர்ஆன் மத்ரஸா பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வில், சீனங் கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத்தினர் நடத்திய 27 சான்மார்க்க அறிவுப் போட்டிகளில் 21 போட்டிகளில் முதலாம் இடத்தையும் 6 போட்டிகளில் இரண்டாம் இடத்தையும் இம் மத்ரஸா பெற்றுள்ளது என்பது விஷேட அம்சமாகும். மேற்படி இவ் விழாவில் சீனங் கோட்டைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட கலீபா இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் நளீமி அவர்களின் சேவைகளை பாராட்டி பொண்ணாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அதிகமான அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் மீளவும் திறைசேரிக்கு அனுப்பப்படும் அபாயகரமான நிலை

(கே எ ஹமீட் )

2026ம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மூன்றாம் நாள் குழுநிலை விவாதம் கௌரவ சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்கிரம தலைமையில் நேற்று நடைபெற்ற போது அவ்விவாதத்தில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம். எஸ். உதுமாலெப்பை கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தனது உரையில், கடந்த 2025 ஆம் ஆண்டில் பல அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் பயன்படுத்தப்படாமல் மீண்டும் திறைசேரிக்குத் திரும்பியுள்ளதாகக் குறிப்பிட்டார். குறிப்பாக, கிழக்கு மாகாணத்திற்கு இந்திய அரசின் நிதி உதவியுடன் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படும் என ஜனாதிபதி அறிவித்திருந்த போதிலும் இதுவரை எந்தத் திட்டங்களும் அமுல்படுத்தப்பட வில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

“இம்முறை, 2026ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணத்திற்கும், குறிப்பாக அம்பாறை மாவட்டத்திற்கும் விசேட நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதற்காக ஜனாதிபதிக்கு மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், சென்ற வரவு - செலவுத்திட்டம் போன்றல்லாமல் இம்முறை நிதிகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்” என்று அவர் வலியுறுத்தினார்.

மேலும், விவசாயிகளும் 35,000 பட்டதாரிகளும் இந்த வரவு-செலவுத் திட்டத்தினை பெரும் நம்பிக்கையுடன் எதிர்நோக்கியிருந்ததாகவும், ஆனால் அவர்களுக்கான தீர்வுகள் இதில் இடம்பெறாதது பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். “மேலும் முடியு மானால் அவர்களுக்கான தீர்வுகளை இணைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்” எனவும் அவர் தனது உரையில் கூறினார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் புதிய மருத்துவ பீடம் அமைக்கப்பட வேண்டும் என்ற தேவையையும் அவர் முன்வைத்தார். “அனைத்து இன மாணவர்களும் ஒன்றிணைந்து கல்வி கற்கும் தென்கிழக்கு பல்கலைக்கழகம், அனைத்து வளங்களையும் கொண்டது. அங்கு மருத்துவ பீடம் நிறுவப்பட்டால், தென்கிழக்கு பிராந்திய சுகாதாரத் துறை மேம்படுவதுடன் பொதுமக்களுக்கு



வழங்கப்படும் சேவைகளும் அதிகரிக்கும்” என்று அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 20வது திருத்தச் சட்டத்தை வெற்றுக் காகிதத்தைக் காட்டி நிறைவேற்றியதன் விளைவாக மாகாண சபைத் தேர்தலை நடாத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். “மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கான நிதி 2026 வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியால் ஒதுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு தீர்மானத்துக்குவரின் விரைவில் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும்,” என்று உதுமாலெப்பை வலியுறுத்தினார்.

அவர் மேலும், “தற்போதைய சூழ்நிலையில் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து பழைய முறையில் தேர்தலை நடத்த உடன்பட்டால் அதற்கான ஏற்பாடுகளை எளிதில் செய்ய முடிவதுடன் இதன் மூலம் பொதுமக்கள் பயனடைவார்கள்” எனவும் தெரிவித்தார்.





கெக்கிராவ பிரதேச சபையின் ஏற்பாட்டில் “ நாளை பசுமையாக இருக்க கெக்கிராவ நகரை சுத்தமாக வைத்திருப்போம் “ எனும் கருப்பொருளின் கீழ் பிரதேச சபை தவிசாளர் தலைமையில் கெக்கிராவ நகர் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளை சுத்தம் செய்யும் பணி(08 ) இடம்பெற்றது. இதன் போது பிரதேச சபை தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டு பணியில் ஈடுபட்டிருந்த போது பிடிக்கப்பட்ட படங்கள். (படம்:எம்.ரீ.ஆரிப்)

# முறையான பஸ் நிலையம் இல்லாத காத்தான்குடி நகரம் – பயணிகளுக்கு பெரும் சிரமம்

(எம்.பஹத் ஜுனைட்)

வியாபார ரீதியிலும் சுற்றுலாத் துறையிலும் வேகமாக அபிவிருத்தி அடைந்து வரும் காத்தான்குடி நகரம், இன்றும் வரை முறையான பஸ் நிலையம் இல்லாமல் பெரும் சிக்கலில் சிக்கியுள்ளது.

தினமும் பல்லாயிரக்கணக்கானோர் நாட்டின் பல பிரதேசங்களிலிருந்து வியாபார, வைத்திய, கல்வி போன்ற தேவைகளுக்காக காத்தான்குடி நகரத்தை நோக்கி வருகை தருகின்றனர். அதேசமயம், காத்தான்குடி மக்கள் பலரும் தங்கள் தேவைகளுக்காக பிற நகரங்களுக்கு பயணம் செய்கின்றனர். ஆனால், இவ்வளவு மக்கள் வருகை தரும் நகரத்தில் முறையான பஸ் நிலையம் இல்லாததால் பொதுமக்கள் மற்றும் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். கிழக்கு மாகாணத்தின் முக்கிய வியாபார மையமாக விளங்கும் காத்தான்குடி நகரத்தில் போக்குவரத்து சீர்மையின்மையால் வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து காத்தான்குடி வர்த்தக சங்கத் தலைவர் கே. எல். பரீட் தெரிவித்ததாவது:

“வியாபார ரீதியாக நகரத்திற்கு வரும் மக்கள் போக்குவரத்துக்கு முறையான திட்டமிடல் இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டு இருக்கின்றனர். அபிவிருத்தி அடைந்த ஊர் என சொல்வதற்கு வெட்கமாக இருக்கிறது. அருகிலுள்ள நகரங்களில் பஸ் நிலையங்கள் காணப்படுகின்றன் ஆனால் காத்தான் குடியில் ஒன்றும் இல்லை. சில வருடங்களுக்கு முன் பஸ் நிலையம் அமைக்க முயற்சிகள் எடுத்தும் அது நிறைவேறவில்லை. அதற்கென ஒதுக்கப்பட்ட காணி இருப்பதால் தற்போதைய அரசாங்கம் உடனடியாக இதனை கவனத்தில் கொண்டு பஸ் நிலையம் ஒன்றை அமைத்துத்தர வேண்டும்” என்றார்.

2007ம் ஆண்டு காலப்பகுதியில் அப்போதைய நகரசபை தவிசாளரின்



முயற்ச்சியில் ருளுயுஐனு நிறுவனத்தின் நிதியுதவியுடன் இலங்கை போக்கு வரத்து சபை மற்றும் தனியார் போக்குவரத்து , முற்சக்கரவண்டி நிறுத்துமிடம், கடைத் தொகுதி, நவீன கழிப்பறை வசதிகளுடனான பஸ் நிலையம் கட்டுவதற்கான கட்டுமான பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது சில அரசியல் தலையீடு காரணமாக இடைநிறுத்தப்பட்டு வேறு பிரதேசத்திற்க்கு மாற்றப்பட்டதாக கூறப்படுகிறது.

இவ்வாறு பயணிகள் இளப்பார்வதற்கான முறையான இடவசதிகள் இல்லாமையால் பயணிகள் பொதிகளுடனும்,கை குழந்தைகளுடனும் வீதியோரங்களில் வெயில்,மழை போன்றவற்றினால் சிரமப்பட்டு வருகின்றனர். அதே போல் பேருந்துகளை நிறுத்துவதற்கு முறையான இடவசதிகள் இல்லாததால் போக்குவரத்து நெரிசல் கூடிய பிரதான வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டுகிறது இதனால் விபத்துக்களும் ஏற்படுகிறது. இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளுக்கு பயணிகளும், பேருந்து சாரதிகளும் முகம் கொடுக்க நேரிட்டுவருகிறது.

இவற்றை கவனத்திற்க்கொண்டு காத்தான்குடி நகரத்தின் வளர்ச்சிக்காகவும், பொதுமக்களின் நலனுக்காகவும் முறையான பஸ் நிலையம் அமைப்பது காலத்தின் தேவை என பலரும் வலியுறுத்துகின்றனர். எனவே இது தொடர்பில் அரசாங்கமும் அதிகாரிகளும் கவனத்திற்கொண்டு ஒதுக்கப்பட்ட அதே காணியில் நவீன வசதிகளை கொண்ட பஸ் நிலையம் அமைத்து தர வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகிறது.

# எருக்கலம்பிட்டி முஸ்லிம் ம.வி.யில் விஞ்ஞான ஆய்வு கூட அடிக்கல் நடும் நிகழ்வு





புத்தளம் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலய வளாகத்தில் நவீன விஞ்ஞான ஆய்வு கூடத்திற் கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் எஸ். எம். ஹுசைமத் தலைமையில் இடம்பெற்றது.

புத்தளம் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளின் பேரில், குறித்த விஞ்ஞான ஆய்வு கூடத்திற்கான கட்டிடம் பாடசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட உள்ளது.

அந்த வகையில் மேற்படி நவீன விஞ்ஞான ஆய்வு கட்டிடம் சுங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதி பணிப்பாளர் லுக்மான் சஹாப்தீனின் முயற்சியாலும், நிதி வழங்குனர் ஒருவரின் பங்களிப்பினாலும், இந்த நவீன விஞ்ஞான ஆய்வு கூட கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வில் புத்தளம் பிரதேச சபையின் உறுப்பினர்கள், புத்தளம் வலயக் கல்வி பணிப்பாளர், கோட்ட கல்வி பணிப்பாளர்கள், றினைசன்ஸ் அமைப்பின் உறுப்பினர்கள், பள்ளிவாசல் நிர்வாக உறுப்பினர்கள், பிரமுகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது

# புத்தளம் நல்லாந்தழுவல முஸ்லிம் ஆரம்ப பாடசாலை சதுரங்க போட்டியில் மாகாண மட்டத்தில் மூன்றாம் இடம்

(எம் எச் எம் சியாஜ்)

மாகாண மட்டத்தில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் புத்தளம் நல்லாந்தழுவை முஸ்லிம் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றி பல வெற்றிகளை பெற்றுள்ளார்கள்.

பல முன்னணி பாடசாலைகளுடன் போட்டியிட்டு மாணவர்கள் முதலாம் மற்றும் மூன்றாம் இடங்கள் பெற்றதுடன் பல திறன் தடைகளை வென்று வெற்றிக் கிண்ணங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்கள்.

இவ்வாறான வெற்றிகளை பெற்றதன் அடிப்படையில் புத்தளம் நல்லாந்தழுவை






முஸ்லிம் ஆரம்ப பாடசாலை மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்று சாதனையை நிலைநாட்டியுள்ளதாக பாடசாலையின் அதிபர் எம்.வை ஹுதைபா தெரிவித்தார்.

வெற்றி பெற்ற மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர் அப்ரித் தௌபீக், நெறிப்படுத்திய எஸ்.எ.எம்.சுக்ர் ஆகியோருக்கு பாடசாலை நிர்வாகம் சார்பாக தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் அதிபர் எம். வை. ஹுதைபா தெரிவித்தார்.

# கத்தார் "மனிதம்" மனிதாபிமான அமைப்பின் இலங்கைத் தூதரகத்தில் கலந்துரையாடல்

கத்தாரில் இயங்கிவருகின்ற "மனிதம்" மனிதாபிமான அமைப்பின் முன்னகர்வுகள் மற்றும் எதிர்கால செயற்திட்டங்கள் தொடர்பான ஆலோசனை வழிகாட்டல் கலந்துரையாடலொன்று கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் சித்தாரா கான் ஆசாத் அமைப்பின் ஸ்தாபக தலைவர்களான பிஸ்ரின் முஹம்மத் மற்றும் மோஹன பிரியா பிரசாத் ஆகியோருக் கிடையில் கடந்த திங்கட்கிழமை கத்தார் நாட்டில் அமையப் பெற்றுள்ள இலங்கை தூதரகத்தில் இடம் பெற்றது.

இதன் போது அமைப்பின் எதிர்கால செயற்திட்டங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதுடன். கத்தார் நாட்டில் சமூக செயற்பாட்டு பணிகளின் போது பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்கு விதிமுறைகள் பற்றிய வழிகாட்டல்கள் தூதுவரால் வழங்கப்பட்டது.



"மனிதம்" மனிதாபிமான அமைப்பு கலை, இலக்கியம், சமூக சேவை, விளையாட்டு என பல துறைகளிலும் கத்தார் வாழ் இலங்கை மக்களுக்கான பல்வேறுபட்ட பணிகளை செய்து வருகின்ற அமைப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஹொரவப்பொத்தானை விபத்தில் இளைஞன் பலி

(எம்.ரீ.ஆரிப்)

திருகோணமலை-ஹொரவப் பொத்தானை பிரதான வீதியில் 10 மைல் கல் பகுதியில் (13) இடம்பெற்ற விபத்தில் இளைஞனொருவர் உயிரிழந்து ள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். மஹதிவுல்வெவ பகுதியில் இருந்து தம்பலகாமம் நோக்கி ஆடை தொழிலுக்கு சென்ற பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த இளைஞன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. குறித்த விபத்தில் கபுகொல்லேவ ஆனவிழுந்தான் பகுதியைச் சேர்ந்த எஹியா உல்முதீன் சஹீல் அஹமட் (19) வயதுடைய



இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைக்கெதிரான விழிப்புணர்வு ஜும்ஆ பிரசங்கங்களை நிகழ்த்துமாறு வக்பு சபை வேண்டுகோள்

(ஏ.எஸ்.எம். ஜாவித்)

வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆ பிரசங்கத்தில் போதைப்பொருள் அச்சுறுத்தலுக்கு எதிராக போதைப் விழிப்புணர்வு குத்பாப் பிரசங்கங்களை செய்யுமாறு இலங்கை வக்பு சபை அறிவித்துள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள போதைப் பொருள் பாவனையை ஒழிப்பதற்கு அரசாங்கம் பல்வேறுபட்ட வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அந்தவகையில் அரசாங்கத்தின் மேற்படித் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் முகமாக நாட்டிலுள்ள சகல ஜும்ஆப் பள்ளிவாசல்களிலும் போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு செயற்திட்டத்தினை மேற் கொள்ளும் வகையில் இலங்கை வக்பு சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மேல்மாகாண கௌரவ ஆளுநரின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட தொரு திட்டம். வக்பு சபை, முஸ்லிம் சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், மஸ்ஜித்கள், சமயக் குழுக்கள் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களால் ஒருங்கிணைக்கப் பட்டது.

அந்த வகையில் நவம்பர் மாதம் 07ஆம், 14 ஆம், 21ஆம், 28ஆம் திகதிகளில் இடம்பெறும் ஜும்ஆப் பிரசங்கங்களில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஒவ்வொரு தலைப்பு வீதம் நான்கு வெள்ளிக் கிழமைகளில் நான்கு தலைப்புக்களில் பிரசங்கங்களை மேற்கொள்ளுமாறு வக்பு சபை அறிவுறுத்தியுள்ளது.

எனவே சகல ஜும்ஆப் பள்ளி வாசல்களிலும் போதை ஒழிப்பு தொடர்பான மேற்படி வேலைத் திட்டத்தை மேற்கொள்ளுமாறு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் கேட்டுக் கொள்கின்றார்.

அதன் அடிப்படையில் முதலாம் வாரம் போதைப்பொருள் அச்சுறுத்தல் நம்பிக்கை மற்றும் மனிதாபிமானத்திற்கான ஒரு சோதனையாக இருப்பதால் போதைப்பொருள் அச்சுறுத்தலின் தீவிரத்தை ஒரு தார்மீக, சமூக மற்றும் தேசிய சவாலாக அடையாளம் காணல் தொடர்பான பிரசங்கங்களை மேற்கொள்ளல்.

இரண்டாம் வாரத்தில் குடும்பம் மற்றும் உம்மா - அடுத்த தலைமுறையைப் பாதுகாத்தலை அடிப்படையாக வைத்து ஆரம்பத்தில் தடுத்துள்கொள்வதிலும் மறுவாழ்வளிப்பதிலும் குடும்பத்தின் பிரதான வகிபங்கு பற்றி தெளிவு படுத்துதல்.

மூன்றாம் வாரத்தில் ஒற்றுமை என்பது பலம் - நம்பிக்கை, சமூகம் மற்றும் தேசத்துடன் ஒன்றாக வாழ்வது பற்றிய தெளிவை மேற்கொள்ளல். அதன்படி சட்டத்தை நடைமுறைப்படுத்துதல், சுகாதாரம் மற்றும் சமயங்களுக்கு இடையேயான கூட்டாளர்களுடன் ஒன்றிணைவதில் சமூகத்தின் பங்களிப்பு பற்றியதாகும்.

நான்காவது வாரத்தில் முகாமை செய்வதல்ல ஆரம்பத்தில் துடைத்தெறிதல் - செயற்பாடுகள் மற்றும் எதிர்ப்பார்ப்புக்கான அழைப்பு தொடர்பான விளக்கத்துடன் உத்வேகத்தைத் தக்கவைத்தல் மற்றும் நம்பிக்கையை நீடித்த மாற்றத்திற்கு உட்படுத்தல் தொடர்பாக தெளிவுபடுத்தல் போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக சகல பள்ளிவாசல்களிலும் இத்திட்டத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

# சீனன்கோட்டை வாய்க்கால் பாலத்தின் விஸ்தீரணப் பணிகள் ஆரம்பம்





( பீ.எம்.முக்தார்)

பேருவலை நகரினூடாக சீனன் கோட்டை வீதியை ஊடறுத்துச் செல்லும் ரயில் பாதைக் கடவை யோடு இருக்கும் வாய்க்கால் பாலத்தின் விஸ்தீரணப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன.

பேருவலை நகரையும் சீனன் கோட்டையையும் இணைக்கும் இப்பாலம் நீண்டகாலமாக குறுகிய அகலம் கொண்டதாக இருப்பதனால் ரயில் கடவை மூடப்பட்டிருக்கும் போது அதிக போக்குவரத்தைக் கொண்டிருக்கும் இப்பாதை வாகன நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலான நிலையில் இருந்தது.

தினமும் ஆயிரக் கணக்கான மக்கள் குறிப்பிட்ட சீனன் கோட்டை வீதியினூடாக சீனன் கோட்டை பத்தை இரத்தினக் கல் சந்தைக்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வந்து செல்கிறார்கள். இது போன்று வெளிநாட்டு இரத்தினக்கல் வர்த்தகர்களும் வரும் நிலையில் அவ்விடம் ஏற்படும் வாகன நெரிசல் மக்களை மிகவும் சங்கடத்துக்கு உள்ளாக்குகிறது.

இவைகளைக் கருத்தில் கொண்டு ஊர் மக்கள் பேருவலை நகர சபைத் தலைவர் மபாஸிம் அஸாஹிர் அவர்களிடம் குறிப்பிட்ட குறுகிய பாலத்தை விஸ்தீரணப் படுத்தித் தருமாறு வேண்டுகோள் விட்டுத்தனர். இவ்வேண்டுகோளின் உண்மைத் தன்மையை ஏற்றுக் கொண்ட நகர சபைத் தலைவர் துரிதமாக இவ்விஸ்தரிப்பு வேலையை ஆரம்பிப்பதாக உறுதி அளித்திருந்த நிலையில் தற்போது பாலம் மற்றும் பாலம் சார்ந்த வீதியும் விஸ்தரிக்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


# வட மத்தியில் பயனற்றுப் போயிருக்கும் 81 பாதுகாப்பு காவல் நிலையங்கள்

(எம்.ரீ.ஆரிப்)

வடமத்திய மாகாணத்தில் காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளான பல கிராமங்களில் 3 ,5 மில்லியன் ரூபாய் க்கும் அதிகமான செலவில் கட்டப்பட்ட 81 பாதுகாப்பு காவல் நிலையங்கள் ஒரு வருடத்திற்கும் மேலாகியும் எந்தப் பயனும் இல்லாமல் போயுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

யானைகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளான கிராமங்களில் வசிப்பவர்களின் உயிர்கள் , சொத்துக்கள், பயிர்கள் மற்றும் மின்சார வேலிகளைப் பாதுகாக்கும் நோக்கில் மாகாண ஆளுநர் அலுவலகத்தின் தலையீட்டில் இந்த காவல் நிலைய கட்டுமானத் திட்டம் 2024 இல் ஆரம்பிக்கப் பட்டது.

இந்த காவல் நிலையங்களுக்கு வனவிலங்கு அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் சிவில் பாதுகாப்பு பணியாளர்கள் அல்லது பல்துறை பிரதிநிதிகளை ஈடுபடுத்த திட்டமிடப்பட்டது. இருந்த போதிலும் காட்டு யானைகளை கட்டுப்படுத்துவதற்கு அல்லது மின் வேலிகளைப் பாதுகாப்பதற்கு



கட்டப்பட்ட காவல் நிலையங்கள் ஒரு வருடத்திற்கும் மேலாகியும் இதுவரை எந்த காவலரும் நியமிக்கப்படவில்லை என பிரதேசவாசிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இலட்சக்கணக்கான ரூபாய் பொதுப் பணத்தை செலவழித்த போதிலும் காட்டு யானைகள் தங்கள் கிராமங்களுக்குள் தொடர்ந்து படையெடுத்து உயிர் இழப்புகளை ஏற்படுத்தி வருவதுடன் சொத்துக்களையும் வாழ் வாதாரத்தையும் அழித்தும் வருவதாக பிரதேசவாசிகள் தெரிவிப்பதுடன் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வாதுவை பொது வடிகான்களின் தடைகளை நிவர்த்திக்க ஸ்மார்ட் இன்டெல் முறைமை





(எம்.எஸ்.எம். முன்தஸிர்)

பாணந்துறை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த வாதுவையில் பொது வடிகான்களில் ஏற்படும் தடைகளை நிவர்த்திக்க Smart Intel என்ற முறைமை அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

இந்த திட்டம் தொடர்பான கள ஆய்வு நடவடிக்கைகள் துறைசார்ந்த நிபுணர் தலைமையிலான குழுவினரால் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நிலந்தி கொட்டகச்சியின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

பாணந்துறையில் பொது வடிகான்களில் ஏற்படும் தடைகளை நிவர்த்தி செய்வதற்கான திட்டமொன்று முன்னெடுக்கப் படவுள்ளது. பாணந்துறை பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி நிலந்தி கொட்டகச்சியின் ஏற்பாட்டில் வாதுவை உப நகரப் பகுதியில் குறிப்பிட்ட Smart Inlet முறைமை அறிமுகப்படுத்தலுக்கான கள ஆய்வு பணிகள் (Feasibility Study) அண்மையில் மேற்கொள்ளப் பட்டன.

மேற்படி துறைசார்ந்த சர்வதேச விருதுபெற்ற கலாநிதி நதீசா சந்திரசேன தலைமையிலான குழுவினர் கள ஆய்வு மேற்கொண்டு திட்ட அறிமுகம் தொடர்பாக பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் நிலந்தி கொட்டகச்சி தலைமையில் கலந்துரையாடினர்.

# அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ்


## இலங்கை முஸ்லிம் வரலாற்றில் ஆழத் தடம்பதித்த பன்முக ஆளுமை – 02

ஹில்மி முஹம்மத்

இலங்கைத் திருநாட்டின் முதலாவது முஸ்லிம் சிவில் நிர்வாக அதிகாரியாகத் தடம் பதித்து (1955) அரசாங்க அதிபராகத் திகழ்ந்தவர்தான் அறிஞர் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் ஆவார். மேலும், முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் பல்வேறு துறைகளிலும் முன்மாதிரியாக செயலாற்றிய அறிஞர், பல்வேறு துறைசார்ந்த நிபுணர்களைத் தோற்றுவிக்கும் உன்னத நோக்கில் கொழும்பு ஸாஹிராவின் அதிபர் பதவியை அலங்கரித்தார். ஏனைய பகுதிகளில் முஸ்லிம் கல்விக் கூடங்களை அமைக்க பின்னணியாகவும் செயற்பட்டார்.

செனட்டராக அரசியல் தலைமைத் துவத்தைப் பொறுப்பேற்ற போதிலும் அது சமூக நலனுக்குப் பாதகமாக அமையும் தறுவாயில் அதனைத் துச்சமாக மதித்துத் தூக்கி எறிந்து, தான் மனச்சாட்சியுள்ள அரசியல் தலைவர் என்பதை நிரூபித்தார்.

எதிர்கால சமூகத் தலைவர்களான மாணவர்களின் கற்கை நடவடிக்கைகள் வறுமை காரணமாகத் தடைப்படாதிருக்கத் தகுந்த சகாய நிதி முறையொன்றை அறிமுகப்படுத்தினார். இன்னும் இளைஞர்களுக்கு ஆளுமைப் பயிற்சியையும் அனுபவ உணர்வுகளையும் வழங்கக்கூடிய இளைஞர் அமைப்புகளையும் உருவாக்கினார். அவை இன்றும் உயிர் வாழ்கின்றன.





அறிஞர் அஸீஸ் இலங்கையின் வட பகுதியான யாழ்ப்பாணத்தின், வண்ணார் பண்ணையில் வாழ்ந்த சுலைமான் முஹியத்தின் அபூபக்கர், மீராமுகைதீன் நாச்சியா தம்பதியினரின் புதல்வராக 1911ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 04ம் திகதி பிறந்தார்.

தந்தை சட்டத்தரணி அபூபக்கர் யாழ்ப்பாண நகர சபையின் உறுப்பினராக மட்டுமன்றி மாவட்டத்தின் காழி நீதிபதியாகவும் இருந்தார்.

இவர்களது குடும்பத்தினர் சன்மார்க்க நெறிமுறைகளைப் பேணக் கூடியவர்களாக இருந்தனர்.

சிறுவன் அப்துல் அஸீஸ் யாழ்ப்பாணம் அல்லபிக்கைப் பள்ளியில் ஆரம்பக் கல்வியைப் பயின்று பின்னர் யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் அதனைத் தொடர்ந்து உயர் வகுப்புகளுக்காக யாழ் இந்துக் கல்லூரிக்கும் சென்றார்.

பின்னர் 1929இல் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் பட்டப்படிப்பை ஆரம்பித்து 1933ம் ஆண்டில் வரலாற்றுத்துறை இளமானிப் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டு, அடுத்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் கற்று உயர் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

அத்துடன் 1935ம் ஆண்டு இலங்கை சிவி-ல் சேவைப் பரீட்சைக்குத் தோற்றி முதல-ாவது முஸ்லிம் சிவில் நிர்வாக அதிகாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

ஏ.எம்.ஏ. அஸீஸ் 1936ம் ஆண்டில், மாத்தளையில் தனது சிவில் சேவைப் பணியை ஆரம்பிக்கிறார்.

பின்னர் இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் 1942 சுங்கத் திணைக்களத்தில் மேலதிக இறங்குதுறை மேற்பார்வையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த அஸீஸை அப்போது காணி, விவசாய அமைச்சராக இருந்த டீ.எஸ். சேனாநாயக்க உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கான அவசர காலக் கச்சேரியை நிறுவி அதன் பொறுப்பு அதிகாரியாக, உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் செய்கிறார்.


மேலும், குறுகிய காலத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற கட்டளையும் விதிக்கப்படுகிறது. கடமைப் பொறுப்பைக்கையேற்ற அஸீஸ், கிழக்கு மாகாணத்தின் தானியக் களஞ்சியமாக அந்த மாவட்டத்தை மாற்றியமைக்கிறார். அஸீஸின் செயற்பாடுகளே இதற்குக் காரணம் என அன்றைய ஆங்கிலப் பத்திரிகைகள் சான்று பகர்கின்றன.

அங்குள்ள வறிய மக்களுக்கு அரசா-ங்கக் காட்டு நிலங்களை வழங்கி விவசாயத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினார். இன்றுகூட அப்பகுதி அஸீஸ் துறை என்று அழைக்கப் படுகிறது. இவரின் வருகை காரணமாக இப்பகுதியில் தமிழ்-முஸ்லிம் உறவு வலுப் பெற்றதாக அக்கால பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.



குடும்ப வாழ்க்கை அறிஞர் அஸீஸ் தனது 26வது வயதில், 1937ம் ஆண்டு கொழும்பிலே பிரபல்யம் மிக்க ஒரு குடும்பத்தைச் சேர்ந்த உம்மு குல்தும் இஸ்மாயில் என்ற நங்கையைத் திருமணம் செய்துகொண்டார்.

உம்மு குல்தும் என்பவர் பாரசீகத்துக்கான முதலாவது இலங்கைத் தூதுவர் எம்.அய். முஹம்மத் அலி (JP)யின் பேத்தியாவார். அப்போதுஅஸீஸ் அவர்கள் மாத்தளையில் சிவில் சேவை அதிகாரியாகப் பணிபுரிந்துவந்தார். அஸீஸ் – உம்மு குல்தும் தம்பதியினருக்கு மரீனா, இக்பால், அலி என்ற மூன்று குழந்தைகள். கொழும்பு-7ல் பான்ஸ் பிளேஸிலுள்ள Meadow Sweet என்ற வீட்டில் அவர்கள் வசித்துவந்தனர்.



ஆசிரியராக சிவில் சேவை அதிகாரியாக 13 வருட காலம் சேவையில் ஈடுபட்ட உயர் அதிகாரியாகப் பணியாற்றி 1948ம் ஆண்டில் தனது பதவியை இராஜினாமாச் செய்தார். அத்துடன் சமூகத்தின் கல்வி முன்னேற்றத்துக்காக உழைக்கும் நோக்கில் கொழும்பு சாஹிராக் கல்லூரியின் அதிபர் பதவியைப் பொறுப்பேற்கிறார்.

கொழும்பு ஸாஹிராவின் அதிபராக அறிஞர் அஸீஸ் கடமையாற்றிய காலம் (1948-1961) அக்கல்லூரியின் பொற்காலமாகும். இக்காலகட்டத்தில் எமது நாட்டின் தலைசிறந்த கல்லூரியாக மாத்திரமன்றி மாலைதீவு, பாக்கிஸ்தான், சிங்கப்பூர், இந்தியா, கென்யா முதலான நாடுகளில் இருந்து மாணவர்கள் இங்கு வந்து கல்வி கற்ற நிறுவனமாக விளங்கியதுடன், ஸாஹிரா கலாசாலை என்று அழைக்கப்பட்டும் வந்தது. கல்வியில் மட்டுமன்றி ஒழுக்கம், விளையாட்டு, சாரணியம் முதலான சகல துறைகளிலும் அக்கல்லூரி சிறந்து விளங்கியது.



அறிஞர் அஸீஸ் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் அறிவு தொடர்பான மனோநிலையை உருவாக்கியவர்களில் முக்கியமான ஒருவராவார். அறிஞர் சித்திலெப்பையை அடுத்து சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தியவருமாவார். பாரம்பரிய மரபுடன், நவீனமயப்படுத்தலை ஒன்றிணைக்கும் செயற்பாடுகளைக் கிரமமாக மேற்கொண்டார். முஸ்லிம் சமூகம் சிறப்பாக எழுச்சி பெற நவீன கல்வி முறையின் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும் இவர் 1942ம் ஆண்டில் கல்விச் சபையொன்றைக்கல்முனையில் உருவாக்கினார். இச் சபையே 1945ல் ,லங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியாக வளர்ச்சி கண்டது.

வசதி குறைந்த முஸ்லிம் மாணவர்களுக்கு ,ந் நிதியம் அவர்களின் உயர்கல்வியைத் தொடர பண உதவிகளைச் செய்தது. சீரான முஸ்லிம் சமுதாயத்துக்குப் பொருத்தமான போதனா மொழியின் அவசியத்தை வலியுறுத்தி வந்துள்ளார். 1940 முதல் இது தொடர்பாகக் குரலெழுப்பியும் கட்டுரைகள் எழுதியும் விழிப்பூட்டி வந்தார். தமிழ் மொழியே முஸ்லிம்களின் தாய்மொழி என்பதை நிதர்சனமாக நிறுவிவந்துள்ளார். தமிழ் மொழியே முஸ்லிம்களின் கோரிக்கை" என்ற மகுடத்தில் 1941ல் கட்டுரை எழுதியது மட்டுமல்லாமல் தென்னிலங்கை முஸ்லிம் மாணவர்களின் போதனா மொழி சிங்களம் இல்லை எனவும் எழுதிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் அதிகாரமுள்ள பல்வேறு அமைப்புகளின் மூலம் சேவை செய்துள்ளார். 1950ல் செனற் சபை உறுப்பினராக மட்டுமன்றி பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும் பணியாற்றினார்.

இன்னும் அதே ஆண்டில் அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்கப் பேரவை (All Ceylon YMMA Conference) என்ற அமைப்பையும்தோற்றுவித்தார். கடந்த 75 வருடங்களாக அந்நிறுவனம் சமூகப் பணிகளை முன்னெடுத்து வருவதுடன் நாடு பூராகவும் கிளைகளைக் கொண்டு செயல்படுகின்றது.

படைப்புகள் பன்மொழிப் பேச்சுத்திறனும் எழுத்தாற்றலும் மிக்க இவர் தன்னுடைய எல்லாப் பணிகளுக்கும் மேலதிகமாக பின்வரும் படைப்புகளையும் எழுதி அச்சிட்டு வெளியிட்டுள்ளார். இலங்கையில் இஸ்லாம், அரபுத் தமிழ் எங்கள் அன்புத் தமிழ், மொழிபெயர்ப்புக் கலை, மிஸ்ரின் வசியம், கிழக்காபிரிக்கக் காட்சிகள், ஆபிரிக்க அனுபவங்கள் மற்றும் தமிழ் யாத்திரை முதலானவை அவரது நூல்களாகும்.

இது தவிர அறிஞர் அஸீஸ் அவர்களால் காலத்துக்குக் காலம் எழுதிப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட 70க்கும் மேற்பட்ட கட்டுரைகள் ஆய்வாளர்களால் வகைப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

இன்னும் இவரால் உருவாக்கப்பட்டு பிற்காலத்தில் சமூக ஆளுமைகளாகத் திகழ்ந்த இவரது மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் கருப்பொருளாக விளங்கியதும் கலாநிதி பேரறிஞர் அஸீஸ்; என்பதாகும்.

1980ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அன்னாருக்கு ,லக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

அறிஞர் சித்திலெப்பை, ரீ.பி. ஜாயா, ஒராபி பாக்ஷா, மகா கவி அல்லாமா இக்பால் போன்றோரை இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பிரபல்யப்படுத்த அஸீஸ் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் மகத்தானவை. அவற்றின் மூலம் மக்கள் மத்தியில் அவருக்கு வரவேற்புக் கிடைத்தது.

இவ்வாறாக அறிவுள்ள, நல்லொழுக்கம் பேணக்கூடிய மற்றும் துணிச்சல் மிகு இஸ்லாமிய சமுதாயமொன்றை உருவாக்க இரவு பகலாகப் பாடுபட்ட அறிஞர் அஸீஸ் அவர்கள் 1973ம் ஆண்டு நவம்பர் 24ம் திகதி அல்லாஹ்வின் அழைப்பை ஏற்றுக்கொண்டார். அல்லாஹ் அன்னாரைப் பொருந்திக்கொள்வானாக.



# நீர்கொழும்பு, சிலாபம் களப்புகளில் கடத்தப்பட்ட 742 கிலோ பீடி இலைகளை கைப்பற்றிய கடற்படை

**(எம் எச் எம் சியாஜ்)**

இலங்கை கடற்படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (09) மற்றும் திங்கட்கிழமை (10) நீர்கொழும்பு களப்பு பகுதியிலும் சிலாபத்தில் உள்ள கருகபனை களப்பு பகுதியிலும் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, நாட்டிற்கு சட்ட விரோதமாக கொண்டு வரப்பட்ட சுமார் எழுநூற்று நாற்பத்திரண்டு (742) கிலோ கிராம் பீடி இலைகள் மற்றும் மூன்று (03) டிங்கி படகுகளை கடற்படையினர் கைப்பற்றினர்.

நீர்கொழும்பு களப்பில் உள்ள கொத்தலாவல பாலத்திற்கு அருகில் மேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் கெலனி நடத்திய சிறப்பு சோதனை நடவடிக்கையின் போது, அந்த கடல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான டிங்கி படகு ஒன்று பயணித்துக் கொண்டிருந்ததை அவதானித்து சோதனை செய்யப்பட்டது. மேலும், சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட 16 பார்சல்களில் அடைக்கப் பட்ட சுமார் ஐநூற்று பதின் மூன்று (513) கிலோகிராம் பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

அதேவேளை சிலாபத்தின் கருகபனே களப்பு பகுதியில் வடமேற்கு கடற்படை கட்டளையின் விரைவு நடவடிக்கை படகுகள் தலைமையகம் நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சந்தேகத்திற்கிடமான இரண்டு டிங்கி படகுகள் சோதனை செய்யப்பட்டன.

இரண்டு (02) டிங்கி படகுகளும், அந்தக் கப்பல்களுக்குள் ஆறு (06) பார்சல்களில் அடைக்கப் பட்ட சுமார் இருநூற்று இருபத்தொன்பது (229) கிலோகிராம் பீடி இலைகளும் கைப்பற்றப்பட்டன.



அதன்படி, நீர்கொழும்பு களப்பில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் டிங்கி படகு கட்டுநாயக்க சுங்கத் தடுப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப் பட்டன. மேலும், சிலாபம், கருகபனே களப்பில் கடற் படையினரால் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் டிங்கி படகு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சிலாபம் கலால் சிறப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# மாவனல்லை பிரதான பஸ்தரிப்பிடம் 50 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு ஆரம்பம்





**(எம்.எஸ்.அமீர் ஹுசைன்)**

மாவனல்லை பிரதான பஸ் தரிப்பிடம் ரூபா 50 இலட்சம் செலவில் காபட் பன்னப்பட்டு புணரமைக்கும் வேலைகளை 2025.11.03 ஆம் திகதி காலையில் மாவனல்லை பிரதேச அபிவிருத்தி குழுவின் தலைவரும் தேசிய மக்கள் சக்தி கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சமந்த ரணசிங்க ஆரம்பித்து வைத்தார்.

இந்த அபிவிருத்தி வேலைகள் காரணமாக வழமையாக இந்த பஸ் நிலையத்தில் நிறுத்தப்படுகின்ற ஹெம்மாதகம, அரனாயக்கா, கேகாலை, ரம்புக்கனை, அலுத்நுவர உட்பட பல பகுதிகளுக்கான பஸ் வண்டிகளை நிறுத்தும் இடமும் தற்காலிகமாக அந்தந்த பகுதி களுக்கு செல்லும் பாதைகளுக்கு மாற்றம் செய்யப் பட்டிருக்கின்றது. பஸ் நிலையத்தை சுற்றி ஒழுங்கற்ற முறையில் சுமார் 40 கடைகள் அளவில் உள்ளன. அண்மையில் அந்த கடைகளில் பரவிய தீ காரணமாக நாசமாகிய கடைகள் பின்னர் சபரகமுவ மாகாண சபையின் நிதி உதவியல் மீண்டும் புணரமைப்பு செய்யப்பட்டுள்ளன. எனினும் மிக நீண்ட காலமாக எந்த விதமான நவீன அபிவிருத்தி பணிகளும் செய்யப்படாமல் இருந்து வருகின்ற ஒரு பஸ் நிலையம் இந்த மாவனல்லை பஸ் நிலையமாகும்.

அதுபற்றி உறுப்பினர் சமந்த ரணசிங்க குறிப்பிடுகைளில் மாவனல்லை பஸ்தரிப்பிடம், சூழ இருக்கின்ற கடைகள், மற்றும் தற்போது பழைய பாலத்திற்கு அருகில் இருந்து பஸ் நிலையம் வரையில் புணரமைப்பு ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் இடை நிறுத்தப்பட்டுள்ள பாதையின் அபிவிருத்தி வேலைகள் என்பவற்றை முறையான ஒரு திட்டத்தின் அடிப்படையில் 2026 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

# மீண்டும் ஆரம்பமாகிறது தேசிய மட்ட அறிவுக் களஞ்சியம்

**(எம்.எஸ்.எம். ஸாகிர்)**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் "அறிவுக் களஞ்சியம்" வானொலி நிகழ்ச்சியின் ஐந்தாவது தேசிய மட்டத்திலான போட்டி நிகழ்ச்சி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் முதலாவது ஒலிப்பதிவு இம்மாதம் பதினைந்தாம் திகதி கொழும்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளுக் கிடையிலான போட்டி நிகழ்ச்சியாக நடைபெறவுள்ளது.

கொழும்பு - 09, இஸ்லாமிக் புக் ஹவுஸ் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இப்போட்டியில், கொழும்பு மாவட்டத்திலுள்ள 15 பாடசாலைகள் கலந்து கொள்ளவுள்ளன.

இறுதியாக நடைபெற்ற தேசிய மட்டத்திலான போட்டியில் வாழைச்சேனை அந்நூர் முஸ்லிம் மகா வித்தியாலயம் தேசிய மட்டத்திலான முதலாவது இடத்தைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

# சுபியான் மௌலவிக்கு யாழில் கௌரவம்



யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் நடைபெற்ற கனடா-யாழ்ப்பாண முஸ்லிம்களின் ஒன்றுகூடலின் போது மர்ஹூம் அப்துல் கபூர் ஞாபகார்த்த விருதாக யாழ்ப்பாணம் மாநகரசபை மேயர் திருமதி. மதிவதனி விவேகானந்தராசா அவர்கள் மக்கள் பணிமனை தலைவர் அஷ்ஷேக் டீ.யு.ளு.சுபியான் அவர்களுக்கு நீண்டகால சமூக சேவையாளர் விருது வழங்கி கௌரவித்த போது எடுத்த படம். 1990 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து இன்று வரையுள்ள நீண்டகால சமூக சேவையாளர் என்றும் மீள்குடியேற்றத்தின்போது யாழ் ஒஸ்மானியா கல்லூரியை மீள ஆரம்பித்ததற்கு சுபியான் மௌலவியே காரணம் என்றும் கூறி விருது வழங்கப்பட்டது.

# பங்கரகம்மனையிலிருந்து பல்கலை செல்லும் முதல் மாணவிக்கான பாராட்டு விழா

**( எம்.கே.எம்.நியார். பதுளை)**

மஹியங்கனை பங்கரகம்மன கிராமத்திலிருந்து முதன் முறையாக கிழக்கு பல்கலைக் கழக கலைத்துறைக்கு தெரிவாகியுள்ள மாணவி நுஸ்ரா கபஹத்தை பாராட்டி கௌரவிக்கும் விழா அவர் கல்வி கற்ற பங்கரகம்மன மு. வித்தியாலயத்தில் அதிபர் எம்.எஸ்.சஹிரீன் அவர்களுடைய தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக மஹியங்கனை வ.க.பணிப்பாளர் யு.று.சோமபால அவர்களும், விஷேட அதிதிகளாக கோ.க.ப. திருமதி. ரு.மு. லக்மினி குணதிலக்க,பதுளை அல் அதான் ம.வி.அதிபர் ஆ.ளு.ஆ.சறூ க்,ஹெல்பின் ஹார்ட் தலைவரும மஹியங்கனை பிரதேச சபை உறுப்பினருமான ஜனாப் ஆ.ரிஸ்வான்,குளோபல் லின்க் தலைவர் சதீல் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.






மேலும் இப்பாடசாலையில் கல்வி கற்று உயர் கல்வியை வெளி பாடசாலைகளில் தொடர்ந்து பல்கலை தெரிவான ளு.யு.கு.சகுபீகா யுனானி மருத்துவம் கொழும்பு பல்கலைக் கழகம்,ஆ.பௌசான் அறபு மொழி கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவில் பாடசாலையின் ஆசிரியர்கள்,பிறபாடசாலை அதிபர்கள்,ஊர் மக்கள் என பெருந்திரளானோர் கலந்து சிறப்பித்தனர்.



சப்ரகமுவ மாகாண அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டில் இருந்து, மாவனல்லை ஆதார வைத்திய சாலைக்கு, 14 கோடி ரூபா செலவி‌ல் 5 மாடிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்க அடிக்கல் நடும் நிகழ்வு மாவனல்லை வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் சமீர தலைமையில் மாவனல்லை வைத்திய சாலை வளாகத்தில் நடைபெற்றது.

படம்:பாரா தாஹீர்

# ஒரு முஸ்லிம் நியூயார்க் நகர மேயர்! சொல்லும் செய்தி என்ன!!





எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

2025ம் ஆண்டு நவம்பர் 4ம் தேதியன்று நடைபெற்ற நியூ யார்க் நகர மேயர் தேர்தலில் ஜோஹ்ரான் மம்தானி வெற்றி பெற்றார்.தேர்தல் முடிவுகள் வெளியாகிய பிறகு, அவரைப் பற்றி பெரிதும் பேசப்படுகிறது. ஆப்பிரிக்க நாடான உகாண்டாவில் பிறந்த மம்தானி, தனது ஏழு வயதில் பெற்றோருடன் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தவர்.

மம்தானின் வெற்றி, ஜனநாயகக் கட்சியின் முற்போக்கு அணியின் வெற்றியாகப் பார்க்கப்படுகிறது. நியூயார்க் மேயர் தேர்தலில் இடதுசாரி கொள்கைகளை கொண்ட மம்தானி வெற்றி பெற்றால், நியூயார்க்கிற்கு அரசு நிதி வழங்காது என அதிபர் ட்ரம்ப் என மிரட்டியிருந்தார். அந்த மிரட்டலே, மம்தானிக்கு வெற்றியைப் பரிசாகத் தந்திருக்கிறது.

1892 ஆம் ஆண்டுக்குப் பிறகு நியூ யார்க் நகரத்தின் இளம் மேயராக மம்தானி இடம்பெற்றுள்ளார்.மேலும், அந்த நகரின் முதல் இஸ்லாமிய மேயராகவும் அவர் வரலாற்றில் இடம்பிடிக்கிறார். இந்நிலையில், மம்தானியின் வெற்றியுடன் சேர்ந்து, நியூ யார்க் நகரம் குறித்தும் பேசப்படுகிறது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பிறந்த நகரமான நியூயார்க்கில், "இவருக்கு வாக்களித்தால் நியூயார்க் நகரத்திற்கான ஃபெடரல் நிதி குறைக்கப்படும்" என்று எச்சரித்தும், 2 மில்லியன் வாக்குகளுக்கு மேல் பெற்று வெற்றி பெற்றுள்ளார் ஜோஹ்ரான் மம்தானி.

1969-ம் ஆண்டிற்கு பிறகு, நியூயார்க் நகரத்தில் 2 மில்லியன் வாக்குகளுக்கு மேல் பெற்ற முதல் வேட்பாளர் ஜோஹ்ரான் மம்தானி.

இந்த வெற்றி விழாவில் மேயர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஸோரான் மம்தானி, தனது வெற்றி உரையில் இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பேச்சை மேற்கோள்காட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் நியூயார்க் நகர மேயர் பதவிக்கு ஜனநாயகக் கட்சியின் சார்பாக இந்திய - அமெரிக்கரான ஸோரான் மம்தானி, குடியரசுக் கட்சியின் சார்பாக கர்டிஸ் ஸ்லிவா, முன்னாள் கவர்னர் ஆண்ட்ரூ குவோமோ ஆகியோர் போட்டியிட்டனர்.

34 வயது ஆகும் ஜோஹ்ரான் மம்தானி உகாண்டாவில் பிறந்தவர். இவரது தந்தை உகாண்டாவை சேர்ந்த எழுத்தாளர் மஹ்மூத் மம்தானி. இவரது தாய் இந்தியாவின் ஒடிசாவை சேர்ந்த மீரா நாயர். மீரா நாயர் திரைப்பட இயக்குநர் ஆவார். சலாம் பாம்பே, நியூயார்க் ஐ லவ் யூ உள்ளிட்ட படங்களை இயக்கியுள்ளார்.

நியூயார்க் நகரத்தில் மேயராக பதவியேற்கும் முதல் முஸ்லீம் மற்றும் தெற்காசியாவை சேர்ந்தவர் என்கிற குணப்பெயரும் இவருக்கு கிடைத்துள்ளது.கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்குப் பிறகு, நியூயார்க் நகரத்தின் இளம் மேயர் எனும் பெருமையும் இவர் பெற்றுள்ளார்.இவர் வருகிற ஜனவரி 1-ஆம் தேதி நியூயார்க் மேயராக பதவியேற்க உள்ளார்.

நியூயார்க் நகரத்தின் மேயர் தேர்தலில் அவர் முன்னெடுத்த முக்கிய பிரசாரங்கள் தான் அவரது வெற்றிக்கு காரணமாக அமைந்தது என்பது தான் உண்மை.இன வேறுபாட்டுக்கு எதிரான மாற்றம். காரணம் அவர் ஒரு முஸ்லிம் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

- பொருளாதார சமத்துவமின்மைக்கு எதிரான மாற்றம்
- இலவச குழந்தைகள் நலன்
- அரசு நடத்தும் மளிகை கடைகள்
- இலவச பேருந்து சேவை

போலீஸாரிடமிருந்து உடனடியாக உதவி கிடைக்கும் வகையில் புதிய பாதுகாப்புத் துறை

அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் தோல்வி அவரது கொள்கை மற்றும் அமெரிக்கா நிதி முடக்கம் ஆகியவற்றிற்கு எதிராக அமைந்தது என்பது தான் உண்மை என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. சர்வதேச நாடுகள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன பின்னடைவை அமெரிக்கா அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் தற்போதைய கொள்கைகளை அமெரிக்கா மக்கள் பார்க்க துவங்கினார்கள். அமெரிக்கா அதிபர் இஸ்ரேலுக்கு அதிக அளவில் நிதி உதவி வழங்கியதன் காரணமாக ஏராளமான அப்பாவி பொது மக்களை இஸ்ரேலிய ராணுவம் படுகொலை செய்துள்ள நிலையில் இதுவும் அமெரிக்கா அறிவுசார் தளத்தில் மிகப் பெரிய அளவில் ஆன வெறுப்பை உண்டாக்கும் வகையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் நிதி முடக்க நிலை 35வது நாளை எட்டியுள்ளது. இதனால், 6.7 லட்சம் அரசு ஊழியர்கள் ஊதியமின்றி கட்டாய விடுப்பில் (ஃபர்லோ) சென்றுள்ளனர்.

மேலும், 7.3 லட்சம் பேர் அத்தியாவசிய சேவைகளில் ஊதியமின்றி பணியாற்றி வருகின்றனர்.

விமான சேவைகள், உணவுத் திட்டங்கள், பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய துறைகள் ஸ்தம்பித்துள்ளன. இது டிரம்பின் முந்தைய ஆட்சியில் (2018-19) நிகழ்ந்த 35 நாட்கள் முடக்கத்தின் சாதனையை மீண்டும் உடைக்கும் நிலையை உருவாக்கியுள்ளது.

அக்டோபர் 1 அன்று தொடங்கிய இந்த நிதி முடக்கம், காங்கிரஸின் (பாராளுமன்றம்) நிதி ஒப்புதல் இல்லாமல் நீடிக்கிறது. ஜனநாயக கட்சி (டெமாக்ரட்ஸ்) மற்றும் குடியரசு கட்சி (ரிபப்ளிகன்ஸ்) இடையிலான பட்ஜெட் விவாதங்கள் தடைபட்டதால், அரசுக்கு நிதி விடுவிப்பு நிறுத்தப்பட்டுள்ளது. அதிபர் டொனால்ட் டிரம்பின் இரண்டாவது காலத்தின் தொடக்கத்திலேயே இது ஏற்பட்டுள்ளது. டிரம்ப், வரி உயர்வு, குடியேற்றக் கட்டுப்பாடு, H1B விசா கடுமை, அரசு ஆட்குறைப்பு போன்ற அதிரடி முடிவுகளை எடுத்து வருவதால், பட்ஜெட் விவாதங்கள் சிக்கலானது.

இந்த முடக்கத்தால், அமெரிக்காவின் அத்தியாவசிய சேவைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

ஊழியர்கள் ஊதியமின்றி பணியாற்ற மறுத்ததால், விமான நிலையங்களில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. கடந்த வார இறுதியில் மட்டும் 16,700 விமானங்கள் தாமதமானதாகவும், 2,282 விமானங்கள் ரத்து செய்யப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விமான நிலைய போக்குவரத்து துறை, "ஆள் பற்றாக்குறை காரணமாக விமானங்கள் குறைக்கப்படுகின்றன" என்று அறிவித்துள்ளது. உணவுத் திட்டம் ஞூயேீ-இல் 42 மில்லியன் ஏழை மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜனநாயக கட்சி தலைவர் ஹாகீம் ஜெஃப்ரீஸ், "டிரம்ப் "பசியை ஆயுதமாக்குகிறார்"" என்று விமர்சித்துள்ளார்.

கடந்த 2018-19ல் டிரம்பின் முதல் காலத்தில் 35 நாட்கள் நீடித்த முடக்கத்தை இப்போது மீண்டும் தாண்ட உள்ளது. டிரம்ப், ட்ரூத் சோஷியலில், "டெமாக்ரட்ஸ் அரசைத் திறக்க வாக்களிட வேண்டும்" என்று குற்றம் சாட்டியுள்ளார். வெள்ளை மாளிகை செய்திப் பேச்சாளர் கார்லின் லெவிட், "நீதிமன்ற உத்தரவின்படி ஞூயேீ-க்கு பகுதி நிதி வழங்கப்படும்" என்று தெரிவித்தார்.

இந்த முடக்கம், அரசு ஊழியர்களிடம் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. 6.7 லட்சம் பேர் விடுப்பில் சென்றுள்ளனர். 7.3 லட்சம் பேர் ஊதியமின்றி பணியாற்றுகின்றனர். போக்குவரத்து செயலர் ஷான் டஃபி, "ஆக்யூபேஸ் மூடல் வாய்ப்பு உள்ளது" என்று எச்சரித்துள்ளார். டிரம்பின் ஆட்குறைப்பு, ரிசிஷன்ஸ் சட்டம் (Rescissions Act 2025) போன்ற முடிவுகள் காங்கிரஸை பிளவுபடுத்தியுள்ளன.

அரசியல் நிபுணர்கள், "இது 2026 நடுப்பகுதி தேர்தல்களுக்கு டிரம்புக்கு எதிராக மாறும்" என்று கூறுகின்றனர். முடக்கம் தொடர்ந்தால், சுகாதாரம், கல்வி, சுற்றுச்சூழல் துறைகளும் பாதிக்கப்படும். அமெரிக்காவின் பொருளாதாரம், உலகளும் பாதிப்படையும் என நிபுணர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவின் நிதி முடக்க நிலை 35வது நாளை எட்டியுள்ளது. இதனால், 6.7 லட்சம் அரசு ஊழியர்கள் ஊதியமின்றி கட்டாய விடுப்பில் (ஃபர்லோ) சென்றுள்ளனர்.

மேலும், 7.3 லட்சம் பேர் அத்தியாவசிய சேவைகளில் ஊதியமின்றி பணியாற்றி வருகின்றனர்.

அமெரிக்கா பொருளாதார வளர்ச்சி தற்போது மிகவும் பின்னடைவை சந்தித்து வரும் நிலையில் அமெரிக்கா குடியரசு கட்சிக்கு மாற்றாக மக்கள் 8 மாதத்தில் திரும்பி உள்ளது குறிப்பிடத்தக்கது. உலகின் பல்வேறு நாடுகளில் மத்தியில் திட்டமிட்டு பரபரப்படும் முஸ்லிம்கள் மீதான வெறுப்புணர்வு அதிகரிப்பு என்பது மிகவும் வளர்ந்து வரும் நிலையில் அமெரிக்கா மக்கள் ஒரு போதும் இது போன்ற வெறுப்புணர்வை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதை முழுமையாக நிரூபிக்கும் வகையில் தான் இந்த முடிவுகள் தரும் தெளிவான தீர்ப்பாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் அதிபர் பராக் ஒபாமா, வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து, "இது டிரம்ப் ஆட்சிக்கு மக்களின் பதில்" என்று கூறினார். டெமாக்ரட் தலைவர் சக் ஷூமர் (Chuck Schumer), "இது டிரம்ப் அஜெண்டாவுக்கு தோல்வி" என்று தெரிவித்தார். இந்தத் தேர்தல், 2026 நடுப்பகுதி தேர்தல்களுக்கு முன்னோட்டமாகக் கருதப்படுகிறது. ஜனநாயக கட்சி உற்சாகம், குடியரசு கட்சியில் விமர்சனங்கள் அதிகரித்துள்ளன.

அரசியல் நிபுணர்கள், "டிரம்பின் தீவிரமான முடிவுகள், பெடரல் ஊழியர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், இளைஞர்கள் போன்றவற்றை அமைதியாக்கியுள்ளன. 2026இல் இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்" என்று கூறுகின்றனர். இந்தத் தேர்தல், டிரம்ப் ஆட்சியின் முதல் சோதனையாக மாறியுள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இரண்டாம் முறை பதவியேற்று ஒரு வருடம் கழித்து, இந்தாண்டின் முதல் மாநிலத் தேர்தல்களில் அவரது குடியரசு கட்சி (ரிபப்ளிகன்) பல இடங்களில் படுதோல்வி அடைந்துள்ளது. விர்ஜினியா, நியூஜெர்சி, நியூயார்க், கலிபோர்னியா உள்ளிட்ட மாநிலங்களில் ஜனநாயக கட்சி (டெமாக்ரட்) வேட்பாளர்கள் பெரும் வெற்றி பெற்றுள்ளனர். இது டிரம்ப் ஆட்சியின் மீதான மக்கள் கோபத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது. அரசு முடக்கம், ஆட்குறைப்பு, வரி உயர்வுகள் போன்ற டிரம்பின் தடைகள் இதற்குக் காரணம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்காவின் உள்நாட்டு அரசியல் மற்றும் நிதி முடக்கத்தை தாண்டி இனி வரும் காலங்களில் மத்திய கிழக்கு, இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளில் அமெரிக்கா தனது பாலிசியை முழுமையாக மாற்றும் வகையில் அவர்களின் கொள்கைகள் அமைய வேண்டும் என்பதே இந்த தீர்ப்பு சொல்லும் செய்தி என்பதே யதார்த்தமான நிலையாகும்.

# கஹட்டோவிட்டவுக்கு பெருமை சேர்த்த கலாநிதி ராபித் நுஹ்மான்

"கல்வி கற்பது ஆண் பெண் இருபாலாருக்கும் கட்டாயக் கடமையாகும்" என்பது அண்ணல் நபியின் அமுத வாக்கு. கல்விக்கு எல்லை இல்லை அதேபோல் கற்றலுக்கும் வயதில்லை. தன் வாழ்நாள் முழுவதும் கல்வி கற்பவர்களாகவே நாம் இருக்க வேண்டும். அந்த வகையில் கஹட்டோவிட்ட முஸ்லிம் கிராமம் இன்று பெருமிதம் கொள்கிறது.

அந்தக் கிராமத்தின் முதல் PhD பட்டம் பெற்ற கல்வியாளர் என்ற பெருமை கலாநிதி ராபித் நுஹ்மான் அவர்களுக்கு உரியது. 1977 மார்ச் 12 ஆம் தேதி மாத்தறை ஆதார வைத்திய சாலையில் பிறந்த ராபித் அவர்கள், மௌலவி நுஃமான் ஹனீபா - மர்ஹூமா நுஜூபா



அத்தாவுல்லா தம்பதிகளின் மூன்றாவது பிள்ளையாவார். அவரின் தாயார் அன்புடன் "இவனை நான் 14 மாதங்கள் சுமந்தேன்" என்று அடிக்கடி கூறியிருப்பது, குடும்பத்தினர் அனைவரும் நினைவுகூறும் ஒரு உணர்ச்சிமிகு விடயமாகும்.

தனது ஆரம்பக் கல்வியை கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலயத்தில் துவங்கி, வெலிகம அரபா கனிஷ்ட வித்தியாலயத்தில் தரம் 3 வரை கற்று, பின்னர் மல்வானை அல் முபாரக் தேசிய பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தார். தொடர்ந்து கஹட்டோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியால யத்திலும் மற்றும் சியம்பலாகஸ் கடுவ மதீனா தேசிய பாடசாலையிலும் கல்வி பயின்றார்.

சிறுவயதிலேயே இனிமையான குரல் வளம் பெற்ற அவர், தரம் 5ல் தேசிய மட்டத்தில் நடை பெற்ற மீலாத் தின இஸ்லாமிய கீதப் போட்டியில் முதலிடம் பெற்றார். தமிழ் தினம், மீலாத் தினம் போன்ற நிகழ்வுகளில் பங்கேற்று பல விருதுகளையும் வெற்றிகளையும் பெற்றார்.

தன்னைத்தானே கல்வியால் மேம்படுத்திக்கொண்ட அவர், இலங்கை மட்டக்குளிய உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனம் (SLIATE) இல் HND in Civil Engineering (HNDE) கற்கைநெறி முடித்து, பின்னர் Quantity Surveying துறையில் நான்கு ஆண்டு பட்டப்படிப்பும் (Bachelor's Degree) பெற்றார். அதனைத் தொடர்ந்து, தமக்குப் பிடித்த துறையான கட்டுமானச் சட்டத்தில் (Construction Law) மூன்று ஆண்டுகள் பயின்று மாஸ்டர் பட்டம் (LLM) பெற்றார். மீண்டும் அதே துறையில் தற்போது PhD பட்டம் பெற்றுள்ளார்.

குறிப்பிடத்தக்க விடயம் என்ன வெனில், மூன்று ஆண்டுகள் எடுக்க வேண்டிய அவரதுீனு கற்கைநெறியை அவர் தனது அயராத உழைப்பின் பலனால் இரண்டு ஆண்டுகளில் IDM International University (UAE) மூலமாக நிறைவு செய்துள்ளார்.

சிறுவயதில் சுறுசுறுப்பும் குறும்பும் நிறைந்தவராக இருந்தாலும், 16 வயதிலேயே குடும்பப் பொறுப்பை உணர்ந்தார். பெற்றோரின் வார்த்தையிலிருந்து விலகாதவர் என்றும், குடும்பத்தில் அன்பும் ஒற்றுமையும் வளர்த்தவர் என்றும் அனைவரினதும் பாராட்டை வென்றார்.

GCE O/L பரீட்சையில் ஆங்கிலத்தில் ஞ சித்தி பெற்றிருந்தபோதிலும், அவரின் ஆங்கில அறிவு பின்னர் பாண்டித்திய நிலையை எட்டியது. அறிவியல்,



தொழில்நுட்பம், மார்க்கம், பொது அறிவு, அரசியல், சமையல், என எதைக் கேட்டாலும் தெளிவாக விளக்கமளிக்கக்கூடிய வித்துவான் அவர். இதனால் அவரை நண்பர்கள் அன்புடன் "ஒரு நடமாடும் அறிவுக் களஞ்சியம்" என அழைப்பர்.

தனது தர்மப் பணிகளைப் பற்றி பேச விரும்பாதவர் அவர். "அல்லாஹ் வழங்கும் நன்மை குறையக் கூடாது" என்பதே அவரது எண்ணம்.

09.11.2025, அன்று கஹட்டோ விட்ட மக்களுக்குப் பெருமை தரும் நாள்!கலாநிதி (டாக்டர்) ராபித் நுஹ்மான் PhD பட்டம் பெற்ற நாள்.

அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அல்லாஹ் இன்னும் பல நன்மைகளையும் சிறப்புகளையும் அருள்வானாக என அனைவரும் துஆ செய்கின்றனர்.

**ஆக்கம்: சகோதரி ரம்ஸானா, நுஹ்மான் (உப அதிபர் - ஆமினா தேசிய கல்லூரி, மாத்தளை)**

# சிங்கள பேச்சுப் போட்டியில் அல் அக்ஸா மாணவி தங்கம் வென்றார்

**(அரபாத் பஹ்ர்தீன்)**

இரண்டாம் மொழி சிங்கள பேச்சுப் போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் தரம் எட்டில் கல்வி பயிலும் மாணவி நசீம் ஆயிஷா மனால் தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்று தங்கம் பதக்கம் வென்றார்.

தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு இடையிலான இரண்டாம் மொழியான சிங்கள மொழிப் போட்டி நிகழ்ச்சிகளில் சிங்களப் பேச்சுப் போட்டியில் கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை மாணவியான நசீம் ஆயிஷா மனால் பங்கேற்றிருந்தார்.

இவர் கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் மாகாண மட்டங்களில் முதல் இடத்தினைப் வெற்றி தேசிய மட்டத்திற்கு தெரிவாகியிருந்தார்.

இந்நிலையில் இன்று (15) கல்வி அமைச்சில் இடம்பெற்ற தேசிய மட்டப் போட்டியிலும் முதல் இடத்தினைத் தனதாக்கிக் கொண்டார் நசீம் ஆயிஷா மனால்.

அதற்கமைய முதலிடத்தினைப் பெற்றுக் கொண்ட அவருக்கு தங்கப் பதக்கத்துடன் சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.

இவ்வாறு வரலாற்று சாதனை படைத்து பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் இதுவரை கால வரலாற்றில் காணப்பட்ட தேசிய கனவை நனவாக்கிய மாணவிக்கும், வழிகாட்டிய பாடசாலையின் அதிபர் அமீர் மற்றும் பயிற்றுவித்த சிங்களப்பாட



ஆசிரியைகளான பவானி, சந்தமாலி தனுஜா மற்றும் இணைப்பாளர் ஆசிரியை பரீன் இல்ஹாம் மற்றும் பெற்றோருக்கும் பாடசாலை சமூகம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பொருள் மீட்பு நிலையம் (MRF) மற்றும் கழிவுப் பொருட்கள் சேமிப்பு மையம் கட்டுமானத்தின் அடிக்கல் நாட்டு விழா





**(பேருவலை பீ.எம்.முக்தார்)**

பேருவலை நகர சபை வளாகத்தில் கழிவுப் பொருட்கள் சேமிப்பு நிலையம் மற்றும் திண்மக் கழிவுப் பொருட்களின் மீள் சுழற்சி மையம் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் வைபவம் நேற்று திங்கட் கிழமை 10 நகர சபை வளாகத்தில் நடை பெற்றது.

மேற்படி வைபவம் பேருவலை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சந்திம ஹெட்டியாராச்சியின் மேற் பார்வையில் பேருவலை நகர சபைத் தலைவர் மபாஸிம் அசாஹிர் அவர்களின் தலைமையில் விமர்சையாக நடைபெற்றது.

களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பேருவளை அபிவிருத்திக் குழு தலைவருமான சாந்திம ஹெட்டியாராச்சி இத்திட்டத்துக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக ஒரு கோடி 20 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார்.

நகர சபை உப தலைவர் விமல சிரி சில்வா,தேசிய மக்கள் சக்தி களுத்துறை மாவட்ட நிறைவேற்று குழு உறுப்பினர் அரூஸ் அஸாத், தேசிய மக்கள் சக்தி பேருவளை அமைப்பாளர் ரம்ஸான் சிஹாப்தீன், முன்னாள் காதி நீதிபதி அல்ஹாஜ் மிர்ஸூக் பளீல், நகர சபை உறுப்பினர்களான அல்ஹாஜ் மஸாஹிம் மொஹமத்,முஷ்பிர் சாபி, செய்த் அஹமத், முகமது ஹிஷாம், எம். என்.எம் இர்ஷாத்,ரிஹானா ஜெஸ்மின்,நகர சபை செயலாளர் உட்பட நகர சபை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.


இந்த திட்டம் திடக் கழிவு மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலுப்படுத்தும் முக்கியமான முன்னேற்றமாகும். இது எதிர்கால தலைமுறையினருக்கான சுத்தமான மற்றும் பசுமையான பேருவளையை உருவாக்கும் நோக்கத்துடன் முன்னெடுக்கப் படுகிறது.

தமது உரையில், நகர பிதா மபாஸிம் அஸாஹிர் அவர்கள் குறிப்பிட்டதாவது இந்த ஆசுகு திட்டம் மறுசுழற்சி செயல்திறனை மேம்படுத்துவதிலும், சுற்றுச்சூழல் பாதிப்பை குறைப்பதிலும், மேலும் ஒழுங்குமுறை மற்றும் பொறுப்பான கழிவு மேலாண்மை நடைமுறைகளை ஊக்குவிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கும் என்று தெரிவித்தார்.

இந்த முக்கியமான திட்டம் சந்திம ஹெட்டியாரச்சி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்த வேலை திட்டத்திற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மூலம் ஒரு கோடி இருபது லட்சம் ரூபாய் நிதியை பெற்றுக் கொடுத்த எமது பாராளுமன்ற உறுப்பினர் சாந்திம ஹெட்டியாராச்சி அவர்களுக்கு பேருவளை வாழ் மக்கள் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

# கொங்காவலையில் இரத்ததான முகாம்




**(எம். எஸ். எம். மசாஹிம்)**

மாத்தளை வை.எம்.எம்.ஏ. ஏற்பாட்டில் தொடர்ந்து நான்காவது வருடமாக நடத்தப்படும் இரத்தான நிகழ்வு 20, வியாழக்கிழமை மாத்தளை கொங்காவலை வீதி முஸ்லிம் வாசிக சாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக வை.எம்.எம்.ஏ. தலைவர் ஏ. எச். எம் ரிஸ்வான் தெரிவித்துள்ளார்.

காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை இடம்பெறும் இவ் இரத்தான வைபவத்தில் மாத்தளை ஆதார வைத்தியசாலையை சேர்ந்த பல வைத்தியர்கள் கலந்துக்கொள்ளவுள்ளதாகவும் இரத்ததான நிகழ்வில் கலந்துக்கொள்ள விரும்பும் நலன் விரும்பிகள் அன்றைய தினம் காலை 8 மனிக்கு மேற்படி மண்பத்திற்கு வரும்படி தலைவர் ரிஸ்வான் மேலும் தெரிவித்தார்.



அரபாத் பஹுர்தீன்

# ரி-20 துடுப்பாட்ட வீரர்கள் தரப்படுத்தலில் இலங்கை வீரர்கள் முன்னேற்றம்

சர்வதேச கிரிக்கெட் பேரவை வெளியிட்டுள்ள ரி20 போட்டிகளின் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசை பட்டியலில் இரண்டு இலங்கை வீரர்கள் முன்னேறியுள்ளனர்.

அதற்கமைய இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான பெத்தும் நிசங்க 3ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

அவர் தரவரிசையில் நான்காமிடத்தி லிருந்த நிலையில், ஒரு இடம் முன்னேறி 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அதேநேரம் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரரான குசல் ஜனித் பெரேரா 2 இடங்கள் முன்னேறி 7 ஆம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்தப் பட்டியலில் இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான அபிஷேக் சர்மா தரவரிசையில் தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கின்றார்.

அத்துடன் இங்கிலாந்து அணியின் பில் சோல்ட் இரண்டாவது இடத்தில் உள்ளதுடன், இங்கிலாந்து அணியின் ஜோஸ் பட்லர் 04ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த தரப்படுத்தலில் இந்திய அணியின் துடுப்பாட்ட வீரரான திலக் வர்மா 2 இடங்கள் பின்னடைவைச் சந்தித்து 5ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

# அடுத்த உலகக்கிண்ணத்துடன் விடைபெறுகிறார் ரொனால்டோ



2026 உலகக் கிண்ண தொடரே தனது கடைசிப் போட்டியாக இருக்கும் என போர்த்துகல் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அடுத்த ஓரிரு வருடங்களில் கால்பந்திலிருந்து ஓய்வு பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டு ள்ளார். 40 வயதான அவர் இதுவரை தேசிய மற்றும் கழகங்களுக்காக 953 கோல்களை அடித்துள்ளார்.

அடுத்த ஆண்டு கனடா, மெக்சிகோ மற்றும் அமெரிக்காவில் நடைபெறும் உலகக் கோப்பை, ரொனால்டோவின் ஆறாவது உலகக் கிண்ண தொடராகும்.

இந்நிலையில், ரியாத்தில் நடந்த டூரிஸ் உச்சி மாநாட்டில் நேர்காணல் ஒன்றின் போது, 2026 தனது கடைசி உலகக் கிண்ண தொடராக இருக்குமா என்று கேட்டபோது, "நிச்சயமாக, ஆம் என ரொனால்டோ பதிலளித்துள்ளார்.



சவுதி அரேபியாவில் அல்-நாசர் கழகத்திற்காக தற்போது விளையாடி வரும் ரொனால்டோ சர்வதேசப் போட்டிகளில் இதுவரை, 143 கோல்களை அடித்து முதலிடத்தில் நீடிக்கின்றார்.

அத்துடன், ஆயிரம் கோல்கள் என்ற தனது இலக்கை நோக்கியும் அவர் விளையாடி வருகின்றார்.

கடந்த வாரம் விரைவில் ஓய்வு பெருவதாக அறிவித்த ரொனால்டோ, அடுத்த இரண்டு ஆண்டுகள் விளையாடவுள்ளதை தற்போது உறுதிப்படுத்தியுள்ளார்.

# பாகிஸ்தான் குறித்து குமார் சங்கக்கார நெகிழ்ச்சி

இலங்கை அணியின் முன்னாள் கேப்டனும் புகழ்பெற்ற வர்ணனையாளருமான குமார் சங்கக்காரவின் அறிக்கை



இந்தியர்களை கொதிப்படையச் செய்துள்ளது.

சில நட்புகளை விட்டுவிட முடியாது. லாகூரில் எங்கள் அணி தாக்கப்பட்டபோது நானும் அந்த அணியில் இருந்தேன், ஆனால் பாகிஸ்தான் படைகளால் அது முறியடிக்கப்பட்டது. அதிர்ஷ்ட வசமாக, நாங்கள் அனைவரும் உயிர் பிழைத்தோம். ஆனால் அதன் பிறகு, நான் பல முறை பாகிஸ்தானுக்குச் சென்றுள்ளேன், எதிர்காலத்தில் தொடர்ந்து செல்வேன், ஏனென்றால் பாகிஸ்தானில் கிரிக்கெட் ஒரு வித்தியாசமான அனுபவம், இங்குள்ள



மக்களின் அன்பும் பாசமும் எப்போதும் என்னை ஈர்க்கின்றன.

# இளையோர் ஆசிய பராக்கிரம மகா வித்தியாலய மாணவனுக்கு வெண்கல பதக்கம்



பஹ்ரைன் நாட்டில் அண்மையில் நடைபெற்ற இளையோர் ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றிய மாத்தளை கல்வி வலயத்துக் குட்பட்ட வீர பராக்கிரம மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று வரும் மாணவனான சத்துர திலுன்ஜன ஜயதிஸ்ஸ 19 வயதின் கீழ் ஈட்டி எரியும் போட்டியில் 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கல பதக்கத்தை ஈட்டியுள்ளார். இதன் மூலம் இவர் தனது பாடசாலைக்கும் நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவரைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று நேற்று பாட சாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது இதன் போது விளையாட்டு வீரரான சத்துர திலுன்ஜன ஜயதிஸ்ஸ யடவத்த நகரிலிருந்து பாடசாலைக்கு வாகனம் மூலம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை பழைய மாணவர்கள், அபிவிருத்தி சங்க உறுப்பினர் பலரும் கலந்து கொண்டனர்.

(மாத்தளை எம்.சதூர்தீன்)



# மேசைப் பந்து உலகத் தரவரிசையில் 3ஆவது இடத்தில் இலங்கையின் டாவி சமரவீர

இலங்கையின் டாவி சமரவீர, 11 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான மேசைப் பந்து உலகத் தரவரிசையில் 3வது இடத்தைப் பிடித்துள்ளார்.

இது அனைத்து வயதிற்குட்பட்ட பிரிவிலும் இலங்கை வீரர் ஒருவர் இதுவரை பெற்ற மிக உயர்ந்த இடம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் வளர்ந்து வரும் மேசைப்பந்தாட்ட வீரர் டாவி சமரவீர, உலக மேசைப்பந்தாட்ட வரலாற்றில் தனது பெயரைப் பொறித்துள்ளார்.

அண்மையில் வெளியிடப்பட்ட 11 வயதுக்குட்பட்டோருக்கான ஆண்கள் (ருனைநச-11 டீழலள) உலக மேசைப்பந்தாட்ட தரவரிசையில் அவர் 3ஆம் இடத்தைப் பிடித்து, எந்தவொரு வயதுப் பிரிவிலும் இலங்கை மேசைபந்தாட்ட வீரர் ஒருவரால் அடையப்பட்ட உயர்ந்தபட்ச தரவரிசை என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார். அவர் 52 இடங்கள் முன்னேறி, 200 தரவரிசைப் புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media (PVT) Ltd. நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியிலிருந்து வெளிவருகின்றது.